மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 5 / மே 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## கொரோனா தந்த படிப்பினை



மோர்ச்செண்டு
சிறுகதை



எதிர்கால
தமிழக அரசியல்



தென்னிந்திய
சினிமாவின் முகவரி



தமிழீழ
விடுதலைப்போரில்
இன்னுயிர் ஈந்த
ஆயிரமாயிரம்
தமிழர்களுக்கு
வீர வணக்கம்!
மே 2009 18
MAY 18
எமது மாவீரர்கள் மகத்தான
இலட்சியவாதிகள். தேசிய விடுதலை
என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த
இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள்.
இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து
வேறுபட்டுநிற்கிறார்கள், உயர்ந்துநிற்கிறார்கள்.
எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்..
தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்
- ஆசிரியர்

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly May 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

# உள்ளே

கொரோனா தந்த படிப்பினை (தலையங்கம்) ....................4

இளநீர் ஏக்கம் (சிறுகதை)
– மு. கலைவாணன்.................... 5

தென்னிந்திய சினிமாவின் முகவரி
சாமிக்கண்ணு வின்செண்ட்
– தினேஷ்.................... 8

எதிர்கால தமிழக அரசியல்
– வேர்மகள்.................... 9

மோர்ச்செண்டு ( சிறுகதை)
– இருங்கோவேள் ....................10

நாடகக் கொட்டாய் முதல் சினிமா கொட்டாய் வரை (2)
பூவை தயா.................... 12

சொல்லின் செல்வர் பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை
– எம். முத்து ....................15

கூகுளும் ஃ பேஸ்புக்கும் தம் வருமானத்தைப்
பகிர்வதே ஜனநாயகத்து நல்லது
– தமிழ் இந்து.................... 18

கல்வி வள்ளல் மெக்காலே
– பி. என். எம். பெரியசாமி ....................19

ஆனையிறவுப் படைத்தளம் ....................22

தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம்.................... 25

அகரம் அறக்கட்டளைக்கு சொத்தை தானம்
கொடுத்த உடுப்பி கோபாலகிருஷ்ணன்
நீதிபதி சந்துரு ....................29

தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள்.................... 30

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# கொரோனா தந்த படிப்பினை

நமது குடும்பத்தினரோ, நமது நண்பர்களோ, நம்பிய உறவினர்களோ நமக்கு எதிரான செயல்களை, மனதளவிலோ செயலினாலோ செய்து விட்டால், தன் விரலே தன் கண்ணைக் குத்தியது என்று சொல்வோம். ஆனால் இன்றைய நிலை, தன் விரலே தன்னைக் கொல்கிறது என்பதுதான் உண்மை. விரலால் கண்ணைத் தொடக்கூடாது, தொட்டால், தீட்டு அல்ல, கொரோனா வந்து விடும். அது உங்கள் உயிரைக் குடித்துவிடும் என்ற அச்சம் வந்துவிட்டது.

ஒரு மனிதனின் உறுப்புகளே அவனது உயிரைக் குடிக்கும் என்ற அச்சத்தில் மனிதன் வாழ வேண்டுமா? என்ற கேள்வி பலருக்கும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கேடுகாலம் மாந்த இனத்தைச் சூழும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. இந்நிலையைச் சீர் செய்ய மனிதர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? மருத்துவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ஆராய்ச்சியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அரசுகள் என்ன செய்யப் போகின்றன? உறுதியான தெளிவான பதிலில்லை.

கொரோனா தொடர்ந்தால் வாழ்வியலை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். அப்படி மாற்றிக் கொண்டு, ஒருத்தரை ஒருத்தர் தொடாமல், அவர்கள் கையிலிருந்து எந்தப் பொருளையும் வாங்காமல், அதற்கு ஈடு எதையும் நாம் கொடுக்காமல் இருந்து விட முடியுமா?. அரசுகளும் திகைத்துதான் நிற்கின்றன. அரசு, ஒரு நாள் தடை என்கிறது, வேறொருநாள் சிலருக்கு மட்டும் தடையில்லை என்கிறது. அந்தச் சிலர் சமுதாயத் தொடர்பு இல்லாமல் வெளியில் செயலாற்றிட முடியுமா? பணத்தைத் தொட்டாலும் கொரோனா, பண்டத்தைத் தொட்டாலும் கொரோனா.

விரல்கள் பத்தும் மூலதனம் என்றார் கவிஞர் தாரா பாரதி. உண்மைதான். இன்றைய நிலை? விரல்களுக்கே தடை உத்தரவு வந்துவிட்டது. அரசு போடவில்லை தடை. மனிதன் தனக்குத்தானே தடை போட்டுக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. குழந்தைகளை தூக்காமல் வளர்த்து விட முடியுமா? தூக்கிக் கொஞ்சாமல் குழல், யாழைவிட குழந்தை சொல் இனிது என்று சொல்லிவிட முடியுமா? அன்பைச் செலுத்த முடியுமா? அன்பைப் பெற முடியுமா? வெளிப் படுத்த முடியுமா? மாணவர்களின் நிலை? கட்டிப் புரண்டு சண்டையிடுதல் வேண்டுமானால் நிறுத்தப் படலாம். கூடி விளையாடும் விளையாட்டுகளை மாணவப் பருவத்தால் தவிர்க்க முடியுமா? வாழ்க்கை நடைமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்கிற போது இவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

நமது முன்னோர்கள் வாழ்ந்த, இயற்கை சார்ந்த இயல்பு வாழ்க்கையை நாம் வாழவில்லை என்றாலும் கூட, அவ்வாழ்க்கையின் எச்சம் நம் வாழ்வில் இருந்தது. இனி அதுவும் இல்லாமல் போகுமோ? இயற்கை, மனித குலத்தை மறுசீரமைப்புச் செய்ய முயல்கிறதோ? இப்படிப்பட்ட அச்சங்கள், சிந்தனைகள் இருந்தாலும் கூட, எதுவரை போகுமோ அதுவரை போகட்டும் என்ற துணிச்சலில் மாந்தரினம் வாழ வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறது.



# இளநீரின் ஏக்கம்

## சிறுகதை

இலக்கியாவும், இனியனும் அக்கா, தம்பி. அவர்கள் இருவரையும் வெளிநாட்டிலிருந்து வந்த மாமா கடைக்குக் கூட்டிச் சென்றார்.

இலக்கியாவும், இனியனும் தங்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருள்களையெல்லாம் மாமாவிடம் கேட்டு வாங்கிக் கொண்டனர்.

கடுமையான வெயில் நேரம் என்பதால் ஒரு கடையில் குளிர்பானம் குடிக்க நின்றார் மாமா. “இலக்கியா... இனியன்... உங்களுக்கு என்ன குளிர் பானம் வேணும்?“ என்று கேட்டார்.

இலக்கியா சற்றும் தயங்காமல் “பாட்டிலில் விற்கும் குளிர்பானம் வேண்டாம்?“ என்றாள். இனியன் தனக்கு “சில்லென்று இருக்கும் எந்த குளிர்பானமாக இருந்தாலும் சரி“ என்றான்.

மாமாவும், இனியனும் ஆளுக்கு ஒரு குளிர் பானத்தை உறிஞ்சிக் குடித்தபடி இருந்தனர். அந்த குளிர்பானக் கடைக்கு அருகிலேயே சாலை ஓரத்தில் இளநீர்க் கடை ஒன்று இருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தாள் இலக்கியா.

அந்த இளநீரைப் பார்த்ததும், தன் அப்பா இளநீர் பற்றி சொன்ன செய்திகள் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

குவியலாக இருந்த இளநீர்க் காய்களிலிருந்து ஒரு இளநீர் மட்டும் திடீரென கண், வாய், மூக்கு இவற்றோடு இனியனை நோக்கி உருண்டு வந்து பேசத் தொடங்கியது.

“தம்பி! இது உனக்கே நல்லாயிருக்கா... இந்த நாட்டுலேயே இயற்கையா கிடைக்கிற என்னை விட்டுட்டு வேதிப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுற வெளிநாட்டுக் குளிர்பானத்தைக் குடிக்கிறியே இதனாலெ உடம்புக்கு எவ்வளவு கெடுதல் தெரியுமா?“ என்றது இளநீர்.

இனியன் கோபத்தோடு... “இந்தக் குளிர்பானம் போல உன்னாலே அழகா இருக்க முடியலேங்கிற வெறுப்புலே தானே பேசுறே“ என்றான்.

“இல்லெ தம்பி! உன்மேல உள்ள பொறுப்புலே பேசுறேன். வளைந்து நெளிந்த பிளாஸ்டிக் பாட்டிலில் உள்ள வண்ணக் கலவைதான் அழகுன்னு நினைச்சியா? அதான் இல்லே. அந்த அழகுலெதான் ஆபத்து அதிகம் இருக்கு. பிளாஸ்டிக் பாட்டில், அதுக்குள்ள இருக்கிற வேதிக்கலவை இந்த ரெண்டுமே உடம்புக்குக் கெடுதல்.



மு. கலைவாணன்

ஆனா! இயற்கையா வளர்ந்த எனக்குள்ள இருக்கிற உயிர்ச்சத்து நிறைஞ்ச இளநீர் உடம்புக்கு ரொம்ப ரொம்ப நல்லது. கலப்படம் செய்ய முடியாதது. இளநீர் தாய்ப்பாலுக்கு இணையான புரதச் சத்தும், கனிமப் பொருளும் கொண்டது. உடல் வெப்பத்தை முறையாப் பராமரிக்கக் கூடியது. உன்னை மாதிரி குழந்தைகளின் அஜீரணத்தை சரி செய்யும். உடம்பிலே உள்ள உள் உறுப்புகளை முறையா செல்பட வைக்கும்.

இரத்தத்திலே உள்ள பிளாஸ்மாவுக்கு மாற்றுப்பு பொருளா செயல்படும். உடம்பிலே உள்ள உப்புப் பற்றாக் குறையை சரி செய்யும். சிறுநீர் சீராப் பிரிவதற்கு உதவும். உங்கிட்ட நிறைய அளவு பொட்டாசியம் இருப்பதால் நான் கூடுதல் இரத்த அழுத்தம் மற்றும் வாதத்துக்கு நல்ல மருந்து. பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற கனிமங்கள் என்னிடம் அதிகம் இருப்பதால் சிறுநீரகத்தில் கற்கள் வருவதைத் தடுக்குறேன்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, தேவையற்ற அசுத்த நீர் போக்கி இரத்த சோகை ஏற்படாம பாது காக்கிறேன். எலும்புகளுக்கும், உடல் உறுப்புகளுக்கும் வலு கொடுத்து உடல் வளர்ச்சி சிறப்பா இருக்க உதவுறேன்.

மூளைக்குப் புத்துணர்வும், நரம்புகளுக்கு வலுவும் ஏற்படுத்தறேன். நினைவாற்றலைத் தூண்டுகிறேன். டைஃபாய்டு, மஞ்சள் காமாலை நோய் தாக்கியவங்க இளநீர் குடிச்சா உடம்பு சீக்கிரம் குணமாகும. உங்களை மாதிரி சின்னப் புள்ளைகளுக்கு மட்டு மில்லாமெ வயசானவங்களுக்கும், நோயாளிகளுக்கும் இயற்கை தந்த சிறந்த டானிக்தான் நான்.

ஆனா... இளநீரான நான் உடலுக்குத் தேவையான காம்பலெக்ஸ் வைட்டமின்களான ரிபோஃப்ளோவின், நியாசின், தையமின், பைரிடாக்சைன் மற்றும் ஃபோலேட் இவற்றையெல்லாம் இயற்கையாகவே தர்றேன். ஆனா நீ குடிக்கிற இந்த பெப்சி, கோக்கு, கொக்கக்கோலான்னு இருக்கிற எல்லாமே தாகத்தைத் தணிக்கிறதுக்குப் பதிலா அதிகமாக்கும். உடம்புக்குள்ள போகிற அந்த வேதிக்கலவை உடம்பைக் கெடுத்திடும். உன் வளர்ச்சியெ தடுத்திடும்.

நீ குடிக்கிற இந்த குளிர்பானத்தைத் தயாரிக்க குறைஞ்ச செலவுதான் ஆகுது. ஆனா... இதுக்குச் செய்யப்படுற விளம்பரத்துக்கும் சேத்துதான் நீங்க பணம் குடுக்குறீங்க. அந்தப் பணம் வெளிநாட்டுக் கம்பெனிக்குப் போய்ச் சேருது.

என்னை விலை குடுத்து வாங்குனா, அந்தப் பணம் உள்ளூருலே உன்னை விளையவச்ச விவசாயிக்குப் போய்ச் சேரும். என்னைக் குடிச்சிட்டுத் தூக்கிப் போட்டா... கொஞ்ச நாள்ளே மக்கி மண்ணுலெ உரமா யிடுவேன். இல்லே காஞ்சி போயி நாறாகி, கயிறாகி மறுபடியும் உங்களுக்கே பயன்படுவேன். உன்னைக் கெடுக்கிற குளிர்பானம் உள்ள இந்த பிளாஸ்டிக்கைத் தூக்கிப்போட்டா... மண்ணையும் கெடுத்து மண்ணை மலடா ஆக்கிடும்.

இளநீரான என் உள்ளே இருக்கிற வழுக்கை இருக்கே அது குளுக்கோசுக்கு இணையானது. அதைச் சாப்பிட்டா உடனேயே ஆற்றல் அதிகமாகும். களைப்பு காணாமப் போயிடும். வயித்துலெ உள்ள குடல் புழுவை வெளியேத்தி வயித்தையும் சுத்தப் படுத்தும்.

இவ்வளவு நல்ல பொருளை விட்டுட்டு கெட்டதைக் குடிக்கிறியே அதை நினைச்சுத்தான் நான் வருத்தப்படுறேன்."

"இளநீர் நல்லதுன்னு சொல்லு ஒத்துக்குறேன். இது கெட்டதுன்னு யார் சொன்னா...?" என்றான் இனியன்.

"பல ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த சொன்ன செய்தியெத்தான் உனக்கு இப்பச் சொன்னேன்! என்னைச் சாப்பிடலேன்னாலும் பரவாயில்லே... இனிமே இதுமாதிரி குளிர்பானங்களை தயவு செய்து குடிச்சு உடம்பெக் கெடுத்துக்காதே! நான் வர்றேன்" என்று சொல்லி மறைந்தது இளநீர்.

"என்ன இலக்கியா! ஏன் இளநீர்க் கடையையே முறைச்சுப் பாத்துக்கிட்டிருக்கே" என்றபடி இலக்கியாவைத் தட்டினார் மாமா.

கற்பனையில் இருந்து இலக்கியா தன் நினைவுக்கு மீண்டு வந்தாள். "மாமா போன வாரம் அப்பா குளிர்பானம் கேட்டதுக்கு அது வேண்டான்னு சொல்லி இளநீர் வாங்கித் தந்தாங்க. அப்ப இளநீரின் சிறப்பையும், குளிர்பானத்தின் கெடுதலையும் எடுத்துச் சொன்னாங்க! அது நினைவுக்கு வந்தது. அதை... அந்த இளநீரே தம்பிக்கிட்ட சொன்னா எப்படி இருக்கும்னு நினைச்சுப்பாத்தேன்" என்றாள்.

"அப்படி என்ன சொன்னாங்க" என்றார் மாமா. இளநீர் பேசியதை மீண்டும் தம்பி இனியனுக்கும், மாமாவுக்கும் சொன்னாள் இலக்கியா. மனம் வருந்திய மாமா "இலக்கியா நீ சொன்ன பிறகுதான் எனக்கே இந்த விவரமெல்லாம் தெரிஞ்சுது. இனி எப்பவும் உம்புக்குக் கெடுதல் செய்யும் குளிர்பானத்தை விட்டுட்டு நம்ம நாட்டுக்கும், நம்ம உடம்புக்கும் நன்மை தரக்கூடிய இளநீரைத்தான் குடிப்பேன்! இனியா இனி நீயும் இளநீரைத்தான் குடிக்கணும்" என்றார். இனியனும் இலக்கியா சொன்ன நல்ல கருத்தை ஏற்றுக் கொண்டான்.

பிஞ்சுகளே நீங்க...?

(பேசாதன பேசினால் என்ற புத்தகத்திலிருந்து...)

# தென்னிந்திய சினிமாவின் முகவரி
# சாமிக்கண்ணு வின்சென்ட்

இன்று வாழும் ஒருவரிடம் தென்னிந்திய சினிமா எங்கு தோன்றியது என்று கேட்டால் உடனே சொல்லும் பதில் சென்னைதான். ஆனால் தென்னிந்திய சினிமா தோன்றியது கோயம் புத்தூரில் என்பதை நம்ப முடிகிறதா?

சினிமா உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு சரியாக பத்து ஆண்டுகளில் கோயம்புத்தூரைச் சார்ந்த ஒரு சாதாரண 21 வயது இளைஞன் சினிமாவை தென்னிந்தி யாவிற்கு கொண்டு வந்தார் அவர்பெயர் "சாமிக்கண்ணு வின்சென்ட்". சவுத் இந்தியன் ரயில்வேஸில் 25 RS சம்பளத் திற்கு கிளர்க்காக வேலை செய்தவர் சாமிக் கண்ணு. அவர் கோயம்புத்தூரில் உள்ள கோட்டை மேட்டில்பிறந்தவர். ( 18ஏப்ரல் 1883 to 22 ஏப்ரல் 1942). ஆரம்ப கால பிரெஞ்சு மொழியின் பேசாத திரைப் படங்கள் மீது இவருக்கு ஆசை அதிகமானது. 1905 பிப்ரவரி மாதம் 2,250 Rs ஒரு பிரெஞ்சு சினிமா அதிபரிடம் ( Du Pont ) இருந்து சினிமா ஒளிபரப்பும் Projector வாங்கினார்.

பின்னர்தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு படங்களை எல்லா ஊர்களுக்கும் சென்று திரையிட்டார். இவர் எல்லா ஊர்களுக்கும் பயணம் செய்து, டென்ட் அமைத்து படங்களை மக்களுக்குக் காட்டினார். "Life of Jesus" என்ற படம் மக்களின் மத்தியில் பிரபலமானது இப்படித்தான் டென்ட் சினிமா உருவானது.

இவர் சிங்கப்பூர், மலேசியா, பெஷாவர், மியான்மர், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக் குப் பயணம் செய்து, தனது படங்களை திரையிட் டார். 1905 ஆம் ஆண்டு தனது முதல் Tent சினிமாவை Edison's Grand Cinema Mega Phone என்ற பெயரில் வெளியிட்டார்.



1914 ம்ஆண்டு முதன்முதலில் சினிமாதி யேட்டரை தனது சொந்த ஊரான கோயம் புத்தூரில் Variety Hall Talkies என்ற பெயரில் திறந்தார். இன்று Delit மீதியேட்டர் என்ற பெயரில் இயங்கு கிறது. இந்தத் திரையரங்கம் தான் Madras Provinceன் முதல் திரையரங்கம். 1919 ல் மின்சாரத்தில் இயங்கக்க கூடிய "Power-driven Rice and Flour மில்லை கோவையில் திறந்தார்.

Vincent Forces Cinema என்ற பெயரில் திருச்சி ரோட்டில் ஒரு டூரிங் டாகீசை பிரிட்டிஷ் வீரர்கள் ஆங்கிலப் படம் பார்ப்பதற்காக உருவாக்கினார்.

சாமிக்கண்ணு வின்சென்ட் கோவையில் 12 தியேட்டர்களைத் திறந்தார். ஆங்கிலப் படங்களை திரையிடுவதற்கு Rainbow தியேட்டரைத் திறந்தார். R.S புறத்தில் Light House தியேட்டரைத் திறந்தார் அதில் தான் முதன் முதலாக அன்ன பூர்ணா சிறிய கேண்டீன் மூலம் பயணத்தைத் தொடங்கி னார்கள். தற்போது அந்த திரையரங்கம் Kenn edy Theatre என்று அழைக்கப்படுகிறது.






Variety Hall Talkies திலிப்குமாரின்பல இந்திப் படங்களை திரையிட்டன. அவை மிகப்பெரிய வெற்றிபெற்றன. Edison மற்றும் Carnatic தியேட்டர் களில் தமிழ்ப்படங்கள் திரையிடப் பட்டன. 1933 ஆம்ஆண்டு Pioneer Film Company மற்றும் Calcutta கம்பெனி யுடன் இணைந்து சாமிக்கண்ணுவின் சென்ட் அவர்கள் "வள்ளி" என்ற படத்தைத் தயாரித்தார். அந்தப் படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. மேலும் Calcu tta நிறுவனம் தயாரித்த "வள்ளிதிருமணம்" என்ற படத்தை அவரின் திரையரங்குளில் வெளியிட் டார். அந்தப் படம் வசூலில் வரலாற்றுச் சாதனை செய்தது.

அந்த வெற்றியைத் தொடர்ந்து சம்பூர்ண ஹரிசந்திரா என்ற படத்தைதயாரித்தார். 1935 ஆம்ஆண்டு "சுபத்ரபரிணயம்" என்ற படத்தை தன்னுடைய Variety Hall Talkie s என்ற பெயரில் தயாரித்தார். இவ்வாறு சினிமாவை தென் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய மனிதரைப் பற்றி எந்த குறிப்பும் மக்களிடையே இல்லை. இந்திய சினிமாவின் முதல் கோட்டீஸ்வரர் சாமிக் கண்ணுவின் சென்ட் ஆவார். இந்தப் பதிவின் மூலம் அவரை நினைவுப்படுத்தியதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி!!!

தகவல் : **தினேஷ்**

இப்போது நாம் திரைப்படங்கள் பார்க்கும் மல்டிப்ளக்ஸ் திரையரங்குகள் டூரிங் டாக்கீஸ் அல்லது டென்ட் கொட்டாயிலிருந்து பரிணமித்து வந்தவை.

இப்போது அடம் ஒலி, 3டி காட்சி எனத் திரையரங்குகள் வித்தியாசமான திரையனுபவத்தை தருகின்றன. ஆனால், தொடக்க கால திரை அனுபவம் இப்படியாக இல்லை. யாரோ ஒருவர் சினிமா புரஜக்டருடன் ஊர் ஊராகச் சென்று தற்காலிக திரைக் கொட்டகை அமைத்து திரைப்படங்களைத் திரையிடுவார்.

தமிழகத்தில் அதற்கு முன்னோடி சாமிக்கண்ணு வின்செண்ட். தமிழகத்தில் டூரிங் டாக்கீஸை அறிமுகப்படுத்தியவர் சாமிக்கண்ணு வின்சென்ட்தான். கோயம்புத்தூரில் அப்போது அவர் அமைத்த திரையரங்கத்தின் பேரில் ஒரு சாலை இருக்கிறது, 'வெரைட்டி ஹால் ரோடு'. டிலைட் திரையரங்கம் என்று இப்போது அறியப்படுகிறது.

சாமிக்கண்ணு வின்செண்ட் தூக்கிச் சுமந்த டெண்ட் கொட்டாயிலிருந்து மல்டி பிளக்ஸ் திரையரங்கங்கள் பரிணமித்திருந்தாலும், இப்போதும் எங்கோ ஓர் இடத்தில் டெண்ட் கொட்டாய் இயங்கத்தான் செய்கிறது.

# எதிர்கால தமிழக அரசியல்

உலகமே கொரோனாவின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற சூழலில் தமிழக அரசியல் களம் பல மாற்றங்களுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆளும் அரசை கவிழ்த்துவிட்டு, ஆறு மாதத்திற்கு ஆளுநர் ஆட்சிக்குள் தமிழகத்தை வைத்து, அந்த நாட்களில் இரு திராவிட பேரியக்கங்களை பலவீனப் படுத்திவிட்டு, ரசினி, கமல் போன்றோர்களின் கட்சிகளைப் பலப்படுத்தி தன்னோடு சேர்த்துக் கொண்டு, ஆட்சியைப் பிடிக்கலாம் என்று பிசேபி வட்டாரத்தில் பேசப்படுகிறது என்று உறுதிப்படுத்தப் படாத செய்திகள் வலம் வருகின்றன.

இப்போது நடைபெறும் அதிமுக ஆட்சியின் காலம் முடிவடைந்த பிறகு, அடுத்த ஆண்டில் ஆறுமாத காலம் ஆளுநர் ஆட்சிக்கு தமிழகத்தை உட்படுத்தி, பின்னர் மேற்கண்ட முறையில் தேர்தல் நடத்துவது என்றும் பேசப்படுகிறதாம்.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராடவிட முன்னேற்றக் கழகமும், பிசேபியும் கமுக்கமாக பேசி வருகின்றன. அந்தப் பேச்சு வார்த்தையில் இரு அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஒன்று, திமுகவும் பிசேபியும் கூட்டணி வைத்துப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிப்பது. இரண்டாவது, தலைவர் களுக்குள் ஒரு ஒப்பந்தத்தை கமுக்கமாக ஏற்படுத்திக் கொண்டு, பிசேபி அல்லாத கூட்டணியை அமைத்து வெற்றி பெற்று, பின்னர் பிசேபிக்கு ஆதரவாக நடந்து கொள்வது என்று இரண்டு வகையில் பேசப்படுவதாக வதந்திகள் பரவிக்கிடக்கின்றன.

ஆளும் அதிமுகவை உடைத்து, அதில் ஒரு பகுதியோடு பாசக இணைந்து தேர்தல் களம் காண்பது என்றும், அல்லது எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிர் குணத்தில் இருக்கும் அமைச்சர்கள் சிலரை பாசகவில் இணைத்துக் கொண்டு, வேறு சில கட்சிகளோடு கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திக்கலாம் என்ற பேச்சும் பாசகவில் இருந்து வருவதாக கூறிக்கொள்கிறார்கள்.

அதிமுகவின் நிலைப்புத் தன்மையும், எதிர்கால கூட்டணியும் திருமதி. சசிகலா நடராசன் அவர்களது விடுதலைக்குப்பின் முழுமையாக மக்களுக்குத் தெரிய வரும் என்று அரசியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எது எப்படி ஆனாலும், தமிழகத்தின் எதிர்காலம் தனது கையில்தான் இருக்க வேண்டும் என்ற பேராசையில், கொரோனா அழிவைக்கூட கருத்தில் கொள்ளாமல், பிசேபி தன் அரசியல் வியூகத்தை பலப் படுத்த முனைந்து கொண்டிருக்கிறது என்பது வெளிப் படையாகத் தெரிகிறது.

**வேர்மகள்**



# மோர்ச்செண்டு

“என்ன மாப்ள! ரொம்ப மகிழ்ச்சியா மருமக னோட விளையாடிட்டிருக்க. உன் காளங்கன்னு அந்த செகப்பி அத்தாச்சி கொல்லைக்குள்ள இறங்கி நெல்லுப்பயிரோட விளையாடிட்டிருக்கு“.

“அய்யய்யோ, என்ன மச்சான் கொல்லையில மேயுதுன்னு ஏனோதானோன்னு பேசுறீங்க, அத அங்க இருந்து வெரட்டிவிட்டிருக்கக் கூடாதா?“ “வெரட்டி விட்டுட்டுத்தான் வந்திருக்கேன் மாப்ளே. நீ போய் பிடிச்சுக் கொண்டு வந்து கட்டு. இல்லன்னா செகப்பி அத்தாச்சி வையிற வையில உன் மானமே போயிரும். அந்த அளவுக்குத் திட்டிக்கிட்டிருக்கு போ, மாப்ள“ என்று கூறிவிட்டு அவர் வேலையைக் கவனிக்க காலடி எடுத்து வைத்தார், இளநாகன் மனைவி மதிவதனியின் அண்ணன் மாயவநாதன்.


“என்ன மச்சான், இந்தக் காளங்கன்னை எப்டிக் கட்டிப் போட்டாலும் கொம்பாலேய கவுர (கயிறு) அவித்துக்குட்டு போய் அட்டகாசம் பண்ணுது. என்ன பண்றதுன்னே தெரியல மச்சான்“. “மாப்ள! அது கவுரு அவுக்குற களவாணித்தனத்தை நல்லா கத்துக்கிருச்சி. அதனால, நீ என்ன பண்றே, அது வாய்க்கு மோர்ச் செண்டு போட்டு விட்டுரு. அதுக்கப் புறம் அவுக எந்தப் பயிரை மேய்வாக பாப்போம்“

“ஆமா, மச்சான் இனி அதத்தான் பண்ணணும். இந்தா நா போறேன். கையோட மோர்ச்செண்டயும் கொண்டுட்டே போறேன்“.

சின்னப்புள்ளயின் கொல்லையை நெருங்க நெருங்க, சின்னப்புள்ளை தன்னையும், தனது மாட்டையும் திட்டுகிற சத்தம் ஏறு வரிசையில் கேட்கத் தொடங் கியது இளநாகனுக்கு. கேட்டும் கேட்காததும் போல சின்னப்புள்ளயிடம் “அக்கா, இனிமே அது உன் கொல் லைக்குள்ள இறங்காதுக்கா, நான் பாத்துக்குறேக்கா, திட்டுறத கொஞ்சம் நிறுத்துக்கா” என்று மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டான்.

“இங்க பாரு தம்பி, இனி ஒருவாட்டி ஒன் காளங் கன்னு என் கொல்லையில ஏறங்குனா, பஞ்சாயத்து வச்சிருவேன், என் பயிருக்கு நீதான் பதில் சொல்லணும் பாத்துக்க“ என்று கூறிவிட்டு தன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார் சின்னப்புள்ள.

இளநாகன், தன் காளங்கன்னு விரும்பிச் சாப்பிடும் அகத்திக்கீரையை பறித்துக் கொண்டு, மாடு மேய்ந்து



கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றார். மாட்டுக்கும் தனக்குமான இசைவு வார்த்தையை எழுப்பினார். தலை நிமிர்த்திப் பார்த்தது காளை. இளநாகனின் கையில் இருந்த அகத்திக்கீரையைப் பார்த்தவுடன், மேய்ந்து கொண்டிருந்ததை விட்டுவிட்டு இளநாகனை நோக்கி வந்தது. இளநாகனும் காளையை நோக்கிச் சென்று அகத்திக்கீரையை மாட்டிற்குக் கொடுத்தார். அவர் கொண்டு சென்ற அகத்திக்கீரை முழுவதையும் சாப்பிடும் வரை காத்திருந்து, கடைசி கைப்பிடியை மாடு தன் வாய்க்குள் வாங்கிக் கொண்டதும், சடாரென்று கையில் இருந்த மோர்ச்செண்டால் காளையின் வாய்மேல் மாட்டி, கழுத்தில் கட்டிவிட்டார்.

காளையோ, அகத்திக்கீரை முடிந்துவிட்டது, நமக்கு வயிறும் நிறைந்துவிட்டது என்ற நிறைவில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. காளையை பிடித்துக் கொண்டு, வீட்டிற்கு வந்து மோர்ச்செண்டை அவிழ்த்து காளைக்கு தண்ணீர் காட்டிவிட்டு (குடிக்க வைத்து) மறுபடியும் மோர்ச்செண்டை மாட்டி கழுத்தில் கட்டிவிட்டு, கழுத்துக்கயிறை மொளக்குச்சியில் கட்டி வைத்தார்.

அடுத்தநாள் காளை விடிவதற்கு முன்னமே ம்ம்மா என்ற ஒலி இளநாகன் மகன் இயலரசனை உசுப்பி விட, அவன் அழ ஆரம்பித்தான். மகனின் அழுகுரல் கேட்டு, மதிவதனி "ஏங்க அந்த மாட்டுக்கு வைக்கோலைப் புடுங்கிப் போட்டுட்டு வாங்க. எரக்கி (இரைக்கு) கத்துது" என்று கணவனை எழுப்பினார். இளநாகன் எழுந்து வக்கைப்படப்பிலிருந்து (வைக்கோல்போர்) வைக்கலை (வைக்கோலை) உருவி மாட்டிற்கு முன் போட்டுவிட்டு மோர்ச்செண்டைக் கழற்றி விட்டார். இனிமே எங்க தூக்கம் வரப்போகுது? என்று அங்கலாய்த்துக் கொண்டு, அழுத மகனுக்கு பாலூட்டிக் கொண்டிருந்த மனைவி அருகில் அமர்ந்து, மனைவியின் அழகை அவரிடம் சொல்லி சீண்டிக் கொண்டிருந்தார். "சும்மா உக்காந்து வம்பளக்காம போயி கோழிக்கூட்டைத் தெறந்துவிடுங்க போங்க" என்று மதிவதனி சொன்னதும், எழுந்து போக மனமில்லாமல் மகனின் கன்னத்தை தடவிக் கொடுத்து விட்டு, எழுந்து போய் கோழிக்கூட்டைத் திறந்து விட்டார் இளநாகன்.

வயது மூத்த சேவல் மட்டும் முதலில் வெளியே வந்து குரலெழுப்ப மற்றவை அடித்துப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தன. இளநாகனின் பார்வை காளங்கன்னு மேல் பட்டபோது, காளங்கன்னு தனது கொம்பால் கயிறை அவிழ்க்க முயன்று கொண்டிருந்தது. "ஒன் வேலையை காட்ட ஆரம்பிச்சுட்டியா இரு, இரு வரேன்" என்று காளையருகில் சென்று கயிறை அவிழ்த்து, காளையை தொட்டிக்கு (மாடு நீர் அருந்தும் கலன்) அழைத்துச் சென்று, தண்ணி காட்டி விட்டு, "இனி உன்னைப் பாத்துக்கிட்டே இருக்க முடியாது, நீ எங்க வேணும்னாலும் போய் சுத்திட்டுவா என்று கூறி, மோர்ச்செண்டை வாயில் மாட்டி கட்டி விட்டார்.

காளங்கன்னு அது விருப்பம்போல் ஊர்த் தெருவில் நடக்கத் தொடங்கியது. இளநாகன் தனது அன்றாட வேலைகளில் மும்முரமாய்ப் போனார். வேளாண் வேலைகள் எல்லாம் முடித்துவிட்டு மதியம் ஒரு மணியைப்போல் கண்மாயில் குளித்துவிட்டு, வீட்டிற்கு வந்தார் இளநாகன். மதிவதனி முகத்தில் மகிழ்ச்சியில்லை. மகனை தொட்டிலில் போடாமல் பாயில் படுக்க வைத்திருந்தார்.

"என்ன மதி ஒரு மாதிரி இருக்கே? நீங்க போனதில இருந்து நல்லா விளையாடிக்கிட்டுதான் இருந்தான். என்னத்தை பொரக்கித் தின்னானோ, ஒரே அழுகை, பேதியாப் போகுது? "பக்கத்துவீட்டு அப்பத்தாக்கிட்ட சொன்னியா மதி". "தூக்கிட்டுப் போயி காட்டுனேங்க, எதையோதான் கைக்கு எட்டுனதை புள்ள தின்றுக்குன்னு ஏதோ இலையை கசக்கி கொடுத்தாங்க. இப்ப அமைதியா தூங்குறான்" என்றார்.

இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து வயல்வேலை முடித்து திரும்பிக் கொண்டிருந்த மதிவதனியின் அண்ணன் மாயவநாதன், "என்னம்மா மதி, மாப்ள என்ன சொல்றாரு. வெள்ளாமையை விட்டுட்டு, படிச்ச படிப்புக்கேத்த மாதிரி வேல பாக்கப் போறேன்னு சொல்றாரா?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார். இருவரையும் கவனித்துவிட்டு, "என்ன ரெண்டுபேரும் ஒரு மாதிரியா இருக்கீங்க" என்றார்.

"ஒன் மருமகனுக்குத்தாண்ணே ஒரே பேதியாக போகுது" "அப்பத்தாட்ட காட்ட வேண்டியதுதானே" காட்டிட்டேண்ணே, பச்சப்புள்ளை எதையாவது வாயில போட்ருக்கும்னு பச்சிலை மருந்து கொடுத்தாங்க" "அப்புறம் என்னம்மா சரியாப்போயிடும். மாப்ள நேத்து உங்க காளங்கன்னுக்கு மோர்ச்செண்டு போட்ட மாதிரி உங்க மகனுக்கும் ஒன்னு மாட்டி விட வேண்டியதுதானே" என்றார் மாயவநாதன்.

"போண்ணே ஒனக்கு இவரை கிண்டல் பண்ணலன்னா தூக்கம் வராது.. என்று தன் பொய்ச் சினத்தைக் காண்பிக்க, அந்த இடத்தின் சூழல் மகிழ்ச்சியாக மாறியது. படிச்ச படிப்பு, நகர வாழ்க்கை எல்லாத்தையும் விட்டுட்டு வந்திருக்கிற மாப்ளய, ஏதாவது சொல்லி அச்சப்படுத்தாதம்மா.


சரி, சரி மாப்ளக்கி பசிக்கும். பழைய சோத்தையும் வெங்காயத்தையும் குடு. உங்க அண்ணி கூழுக்கு முன்னாடி உக்காந்துட்டு நான் வரட்டும்னு கூழ் குடிக்காம காத்திருப்பா, நான் வரேன்" என்று அவர் வீடு நோக்கி நடந்தார்.

**- இருங்கோவேள்**



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

## 2



## மனிதன் ஒரு புத்தகம்

### பூவை தயா

நான் பள்ளியில் சுதந்திரதினத்தன்று திமுக கொடி குத்தி வந்தது... சக மாணவர்கள் மீதுள்ள கோபத்தில்தான்! அவர்கள் எப்போதும் என்னிடத்தில் 'சிவாஜிதான் பெரிய ஆள்' என்பார்கள். நானோ... எம்ஜியார்தான் பெரிய ஆள் என்பேன்.

அதன் காரணமாய் எம்ஜியார் சார்ந்த திமுக கொடியான கருப்பு சிவப்பைக் குத்தி வந்தேனே தவிர, வேறு ஒன்றும் காரணமில்லை. சொல்லப்போனால் திமுக என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது.

1617 வயதில் நான் தொடர்ந்து எதைப்பற்றியாவது பாடலாகவோ அல்லது, ஒரு சம்பவத்தை மனதில் கற்பனை செய்து, அதற்கு உரையாடலாகவோ எழுதிக் கொண்டே இருப்பேன். இந்தப் பழக்கம் நீண்ட ஆண்டுகளாக என்னைத் தொற்றிக் கொண்டது. பின்னாளில் அவைகள் என் முதல் நாடகத்திற்குப் பெரிதும் துணை நின்றது. ஆனால் அந்த நாடகம்தான் நிற்கவில்லை.

இப்படி நான் எழுதிக்கொண்டேயிருப்பதைப் பார்த்த என் அப்பா, அம்மாவிடம் கேட்பார்கள் "இவன் என்ன சதா எழுதிக்கிட்டேயிருக்கான்... அப்படி என்னதான் எழுதுறான்?" என்று "எதையோ எழுதுறான் நல்லாதான் எழுதுறான்.

அவனை அவன் போக்குல விடுங்க... படிக்கத்தான் செய்யலே, எழுதவாவது செய்யட்டும், அவனுக்குன்னு ஒரு காலம் வராமலா போயிடும்" என்று அம்மா சொல்வார்கள். அப்படியொரு காலம் இன்றுவரை வந்ததாகத் தெரியவில்லை. வராமல் போவதற்கும் வாய்பில்லை... காரணம், நம்பிக்கையின் பிரகாசம் இப்போதுதான் என் மீது ஒளிவீசத் தொடங்கியிருக் கிறது. ஒருவனது வாழ்வில் அவன் மரணிக்கும் வரை எதுவும் நடக்கலாம் என்பது முன்னோரின் சொல்லாகும்.

ஒருமுறை அப்பா என்னை இசைஞானி இளையராஜாவிடம் அறிமுகப்படுத்தி, "இவன் கதை கவிதையெல்லாம் நல்லா எழுதுவான்" என்றார்கள். அவரும் சிரித்த முகத்தோடு அவர் எழுதிய நூல் ஒன்றினைக் கொடுத்தார். அந்த நூலை நான் பிரித்துப் பார்த்த பக்கத்தில் 'நூலுக்காக கவிதை எழுதக்கூடாது... கவிதையென்பது தானாக பிறக்க வேண்டும், அதில் உயிரும் உணர்ச்சியும் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். இன்றுவரை அந்த வார்த்தைகள் எனது மனதில் ஓடிய வண்ணமே இருக்கின்றன. அதன் பின்னர் என்ன காரணமோ தெரியவில்லை நான் இசைஞானியைச் சென்று சந்திக்கவேயில்லை.

என் அம்மா தந்த ஊக்கத்தால் நான் தொடர்ந்து பல நாடகங்கள், கவிதை நூல்கள் என எழுதிக் கொண்டேயிருக்கிறேன். இன்று அவர்கள் எங்களை விட்டு மறைந்து விட்டார்கள். அம்மாவின் நினைவாக இன்றுவரை நான் அசைவம் சாப்பிடுவதில்லையென்று உறுதி கொண்டேன்.

இந்த இயந்திர உலகத்தில், யாரும் யாரையும் நினைத்துப் பார்க்கக்கூட நேரமில்லாதவர்களாகி விட்டார்கள். அப்படியொரு மன அழுத்தத்தில் எல்லோரும் இன்று உழன்று கொண்டிருக்கிறார்கள். ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, பல பக்கங்கள் கடந்து சென்று கொண்டிருப்பதைப் போன்று... நம்முடன் இருந்த உறவுகளும் கடந்து சென்று விடுகின்றன.

சில நேரம் மறந்தே சென்று விடுகின்றன. அதன் காரண மாகத்தான் நான் அசைவ உணவைச் சாப்பிடுவதை முற்றிலும் தவிர்த்தேன். இன்று பலர் என்னை ஏன் அசைவம் சாப்பிடுவதில்லை என்று கேட்கும் நேரம், என் அம்மாவிற்காக, என்று பதிலுரைக்கின்றேன். ஆக தினமும் அம்மாவை நினைவு கூறுகின்றேன். அது என் மனதிற்கு ஒரு நிறைவைத் தருகிறது.

**இந்த இயந்திர உலகத்தில், யாரும் யாரையும் நினைத்துப் பார்க்கக்கூட நேரமில்லாதவர்களாகி விட்டார்கள். அப்படியொரு மன அழுத்தத்தில் எல்லோரும் இன்று உழன்று கொண்டிருக்கிறார்கள். ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, பல பக்கங்கள் கடந்து சென்று கொண்டிருப்பதைப் போன்று... நம்முடன் இருந்த உறவுகளும் கடந்து சென்று விடுகின்றன.**


எனது தாயார் என்மீது கொண்ட பெரும் நம்பிக்கை, எந்த வித கெட்ட பழக்கங்களும் இல்லாமல் வளர்த்ததில். அதன் பொருட்டு... நான் நாடகம் முடிந்து இரவு ஒரு மணி இரண்டு மணிக்கு மேல் வீட்டிற்கு வந்தாலும், எனது தாயார் பயமின்றியும் பதட்ட மின்றியும் இருப்பார்கள். அப்பா அம்மாவின் வழி தொட்டு, எதிலும் நேர்மையாகவும் நியாயமாகவும் இருக்கப் பழகிக் கொண்டதில், இன்று அதுவே எனக்குக் கிடைத்த பெரும் சொத்தாக உள்ளது.

எனக்குப் பதினெட்டு வயதிருக்கும்போது ஒரு 'எலக்ட்ரிக்கல் காண்ட்ராக்டரிம்' இரண்டு ஆண்டு களுக்கு மேலே வேலை செய்தேன். அந்த வேலை யிலிருந்து நின்ற பிறகு மீண்டும் எழுத ஆரம்பித்தேன். அதன் பின்னர் 'மயிலை லஸ் கார்னரில்' எனது தாய்மாமாவான சிவசுப்பிரமணியன் அவர்கள் நடத்தி வந்த பெட்ரோல் பங்கில் வேலை செய்தேன். இரவு நேரங்களில் எழுதவும் செய்தேன்.

அங்கிருந்தபடியே 'மனிதன் ஒரு புத்தகம்' என்ற ஒரு நாடகத்தை முழுவதுமாய் எழுதி, நண்பர்கள் துணையுடன் அரங்கேற்றமும் செய்தேன். அங்கும் இரண்டு வருடமே இருந்திருப்பேன்... அதன் பின்னர் எனது சித்தப்பாவான ஏ.எல்.அழகப்பன் (திரைப்படத் தயாரிப்பாளர்) அவர்கள் போரூரில் 'லீசுக்கு' எடுத்து நடத்திய 'டூரிங் டாக்கிஸில்' ஒரு ஆண்டு வேலை செய்தேன். இதன் பின்னர்தான் நான் ஒரு முழு நேரக் கலைஞனாக, எழுத்தாளனாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

பல்வேறு துறைகளில் வேலையில் இருந்தபோது நிகழ்ந்த சுவையான நிகழ்வுகளை பின்வரும் சமயங் களில் விவரிக்கிறேன். இந்த நேரத்தில் நாங்கள் வசிக்கும் தேனாம்பேட்டையைப் பற்றி சுருக்கமாய் ஒன்றைச் சொல்கிறேன். எனக்கு இவ்வுலகில் தேனாம் பேட்டையைத் தெரிந்த அளவிற்கு வேறு ஏதும் தெரியாது. தேனாம்பேட்டையில் உள்ளவர் களுக்கோ அவ்வளவாக என்னைத் தெரியாது.

*பயணம் தொடரும்...*



**மக்களுக்கு அள்ளிக் கொடுத்தவர்கள்**

சாருக்கான் 33 கோடி ரூபாய், வெண்டிலேட்டர்ஸ்
சல்மான்கான் 15 கோடி 1000 ஆம்புலன்ஸ்கள்
அமீர்கான் 23 கோடி, வெண்டிலேட்டர்ஸ்
இர்பான் பதான் 18 கோடி
ஜாவித் அக்தர் 6 கோடி
அஜீம் பிரேம்ஜி 1,250 கோடி
வக்ப் போர்ட் 38 இலட்சம்
டெல்லி சாகி இமாம் 46 இலட்சம்
எம்பிஎல்பி நிறுவனம் 75 இலட்சம்
டெல்லி நிஜாமுதீன் மர்கஸ் 1 கோடி
அஜ்மீர் தர்கா 3 கோடி
யு பி தேவ்பந்த அரபி மத்ரஸா 12 இலட்சம்
யூசுப்காஜா சிப்லா 2 கோடி, டெஸ்ட் கிட்ஸ்
அசவுதின் உவைசி 95 கோடி

**தேசபக்தர்கள்? வழங்கிய நிதி...**

ஆர்எஸ்எஸ் 0, பஜ்ரங்தள் 0, பசு பாதுகாப்பு இயக்கம் 0, அபினவ் பாரத் 0, இந்து மகா சபை 0, யுவவாகினி 0.

**உழைப்பாளர்**
**தின( ம் ) மே**

உழைப்பவனுக்கு
நேரம் காலமே
இல்லையப்பா!
பஞ்சம் பட்டினிதானப்பா!
இதை உணர்ந்த
லெனின் பொங்கி
எழுந்தாரப்பா!
போராடியே பெற்றும்
தந்தாரப்பா!
ஒரு நாளைக்கு
எட்டு மணி நேரந்தான்
ஞாயிறு அன்று
விடுமுறைதானப்பா!

அதைத்தான் இன்று
ஒவ்வொரு
தொழிலாளிக்கும்
செயல் வடிவம்தானப்பா!

அதை நினைவு
படுத்தும் விதமே
மே ஒன்றப்பா!

அடிமை விலங்கை
உடைத்து தொழிலாளி
என்ற அடையாளம்
வந்த நாளப்பா!

உழைத்தவன் கைகள்
ஓய்ந்து கிடக்குதே
இந்நாள் இதற்கு
விடிவு காலம் எந்நாள்?

மீண்டும் ஒரு போராட்டம்
பட்டினிப் போராட்டம்
வீட்டினிலே
உழைப்பவனுக்கு
உயிரே உழைப்புதான்
அதை இல்லையென்றால்
உயிருள்ள பிணமப்பா!

வெகு விரைவில் வந்து
விடும் தீர்வுதனை
தந்து விடும் உடலது
மறுக்குமுன்னே!

வாணியம்பாடி தியாகராசன்
சலூன்கடை, சென்னை.
9962082032.

# உலகச் சுகாதார அமைப்பின் நிர்வாகக் குழு தலைமைப் பொறுப்பை ஏற்கிறது இந்தியா!

கொரோனா நோய்த் தொற்றால் உலக நாடுகள் அவதிக்குள்ளா கியுள்ள சூழலில், உலகச் சுகாதார அமைப்பின் நிர்வாகக் குழுவின் தலைமைப்பொறுப்பை இந்தியா ஏற்க உள்ளது. உலக சுகாதார அமைப்பின் மாநாடு மே மாதம் 18ஆம் நாள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மாநாட்டின் போது நிர்வாகக் குழுவில் இடம் பெறவுள்ள உறுப்பினர்களும், அக்குழுவின் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வுள்ளனர்.

மே மாதம் 22ஆம் நாள் நிருவாகக் குழுவின் முதல் கூட்டம் நடை பெறவுள்ளது. அப்போது, இந்தியாவின் பிரதிநிதி அக் கூட்டத்துக்குத் தலைமை யேற்கவுள்ளார். தற்போது நிர்வாகக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஜப்பான் வகித்து வருகிறது. அந்நாட்டின் ஓராண்டு காலம் மே மாதத்துடன் நிறைவடை கிறது. ஆகவே நிருவாகக் குழுவின் தலைமைப் பொறுப்டிப இந்தியாவுக்கு வழங்க உலகச் சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியக் குழு கடந்த ஆண்டே ஒருமனதாகப் பரிந்துரைத் திருந்தது. அந்நிருவாகக் குழுவில் மூன்று ஆண்டுகள் உறுப்பினராக இடம்பெறவும் இந்தியாவுக்கு தென்கிழக்கு ஆசியக் குழு ஆதரவு தெரிவித்திருந்தது.

அதனடிப்படையில், உலகச் சுகாதார அமைப்பின் நிருவாகக் குழுவுக்கான தலைமைப் பொறுப்பை மே மாதம் ஏற்கும் இந்தியா, அடுத்த ஓராண்டுக்கு அப்பொறுப்பில் நீடிக்கும்.

நிருவாகக் குழுவில் 34 உறுப்பினர்கள் இம்பெறுவர். உலகச் சுகாதார அமைப்பின் முடிவுகளை செயல்படுத்தும் பொறுப்பு நிருவாகக் குழு வசமே உள்ளது. நிருவாகக் குழுவின் தலைவர், உலகச் சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸூ டன் இணைந்து பணியாற்றுவார். பல்வேறு முக்கிய முடிவுகள் எடுப்பது தொடர்பாக உலகச் சுகாதார அமைப்பின் இயக்குநர், நிருவாகக் குழுவின் தலைவருடன் ஆலோசிப்பார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இயக்குநர் டெட்ரோசின் ஐந்து ஆண்டு பதிவிக்காலம் 2021ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறைவடைகிறது. எனவே, உலக சுகாதார அமைப்பின் அடுத்த இயக்குநரைத் தேர்ந்தெடுப் பதில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கவுள்ளது.

மேலும், உலகச் சுகாதார அமைப்பின் நிதிநிலைக் குழுவிலும் இந்தியா இடம்பெறவுள்ளது. இந்தோனேசியாவின் பதவிக் காலம் முடிவடையவுள்ள சூழலில், இந்தியா அந்தப் பொறுப்பை ஏற்கவுள்ளது.



# ‘சொல்லின் செல்வர்’ பேராசிரியர் இரா.பி.சேதுப் பிள்ளை

இரா. பி. சேதுப்பிள்ளை தமிழ்நாட்டில் உள்ளதிரு நெல்வேலியில் இராச வல்லிபுரம் என்றஊரில் 1896ஆம்ஆண்டுமார்ச்சுத்திங்கள் 2ஆம் நாள் பிறவிப் பெருமான்பிள்ளை சொர்ணம்மாள் ஆகியோருக்கு மகவாகப் பிறந்தார்.

சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததனால் பிறந்த தம்மகனுக்கு சேது என்று பெயர்சூட்டினர். இரா. பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துகளாக அமைந்த 'இரா' என்பது இராசவல்லிபுரத்தையும் 'பி' என்பது 'பிறவிப் பெருமான் பிள்ளை' அவர்களையும்குறிப்பன. ஐந்தாண்டு நிரம்பிய சேது உள்ளூர்த் திண்ணைப் பள்ளியில்



சேர்ந்து, தமிழ் நீதிநூல்களைக் கற்றார். இராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத்தலைவர் அருணாசல தேசிகரிடம் இவர் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார். பின்னர்தனது தொடக்கக் கல்வியைப் பாளையங்கோட்டை தூயசேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், இடைநிலை வகுப்பின் (இண்டர்மீடியட்) இரண்டாண்டுகளை திருநெல்வேலி இந்துக்கல்லூரியிலும், இளங்கலை வகுப்பின் இரண்டாண்டு களைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று தேர்ச்சி பெற்றார். உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக விளங்கிய சுப்பிரமணியம், இந்துக் கல்லூரித் தமிழாசிரியர் சிவராமன் ஆகியோர் சேதுவிற்கு தமிழார்வத்தை வளர்த்தவர்கள்.

தாம் படித்தபச்சையப்பன் கல்லூரியிலேயே ஆசிரியராகவும்பணியாற்றினார். பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டே சட்டக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். சட்டப்படிப்பை முடித்து நெல்லை திரும்பிய சேது, நெல்லையப் பபிள்ளையின் மகள் ஆழ்வார் ஜானகியை மணந்தார். சேதுப்பிள்ளை 1923ஆம்ஆண்டில் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பதிவுசெய்து கொண்டு பணியாற்றத் தொடங்கினார். நெல்லையில் வழக்குரைஞர்தொழிலைமேற்கொண்டசேது, நகர்மன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பணியின்போது இவர்நெல்லை நகரில் தெருக்களின் பெயர்கள் தவறாக வழங்கி வந்ததை மாற்றி அத்தெருக்களின் உண்மையான பெயர்கள் நிலைபெறுமாறு செய்தார்.

வழக்குரைஞராக இருப்பினும் தமிழ்மொழியின் மீதுமிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். இவரின் செந்தமிழ்த் திறம் அறிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரைத்தமிழ் அறிஞராக ஏற்றுக்கொண்டு தமிழ்த் துறையில் தமிழ்ப் பேரறிஞர் பதவியை அளித்தது. சேதுப்பிள்ளை தமிழ்த் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்துவிபுலானந்தர் சோமசுந்தர பாரதியார் ஆகிய இருபெரும்புலவர்களின் தலைமை யில் தொடர்ந்து ஆறாண்டுகள் பணிபுரிந்தார். தம்மிடுக்கான செந்தமிழ்ப் பேச்சால் மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தார். மொழிநூலை இளங்கலை வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலத்திலேயே கற்பித்துத்

தமிழுக்கு இணையான தம் ஆங்கிலப் புலமையையும் வெளிப்படுத்தினார்.

1936இல் சென்னைப் பல்கலைக் கழகம் சேதுப் பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தியது. 25 ஆண்டுகாலம் சென்னைப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப் பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரை நடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். அந்நாளில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித்துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பணியாற்றிவந்தார். வையாபுரிப் பிள்ளை தொகுத்து வந்த தமிழ்ப் பேரகராதிப் பணி நிறை வேற சேதுப்பிள்ளை துணை நின்றார். வையாபுரிப் பிள்ளையின் ஓய்வுக்குப் பின் இவர் தலைமைப் பதவியை ஏற்றார். அப்போது பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவர் களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தினார். ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டி யாகத் துணை நின்று உதவினார். இவரின் முயற்சி யினால், திராவிடப்பொதுச்சொற்கள், திராவிடப் பொதுப் பழமொழிகள் ஆகிய இரு நூல்களைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. சேதுப் பிள்ளையின் 'தமிழின்பம்' என்னும் நூலுக்கு இந்திய அரசு அளிக்கும் சாகித்ய அகாதமியின் பரிசு வழங்கப்பட்டது. இலக்கிய அமைப்புகளும் அறிஞர் பெருமக்களும் சேதுப்பிள்ளை யின் தமிழுக்குத் தங்கள் பாராட்டு களைத் தெரிவித்த வண்ணம் இருந்தனர். கவியோகி எனப்போற்றப் படும் சுத்தானந்த பாரதியார் இரா.பி.சேதுப்பிள்ளையைச் "செந்தமிழுக்குச் சேதுப் பிள்ளை" என்று அழைத்துப் பாராட்டினார். மேலும் உரைநடையில் தமிழின்பம் நுகரவேண்டுமானால் சேதுப்பிள்ளை செந்தமிழைப் படிக்க வேண்டும் என்பார்.

அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ம்ஆண்டு 'சொல்லின்செல்வர்' என்னும் விருது வழங்கியது. சேதுப்பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் 'முனைவர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. மேலும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கால்நூற்றாண்டு காலம் பணியாற்றியதைப் பாராட்டி "வெள்ளி விழா" எடுத்தும், "இலக்கியப் பேரறிஞர்" என்றபட்டம் அளித்தும் சிறப்பித்தது. சேதுப்பிள்ளைஏப்ரல் 25, 1961ல்தம் 65 ஆம்வயதில் இறந்தார். இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டுள்ளன. இரா.பி. சேதுப் பிள்ளையின் உரைநடைகளில் அடுக்குத் தொடர், எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகியன அமைந்திருக்கும். எடுத்துக்காட்டு அருமையான தமிழ்ச் சொல் ஒன்று இருக்க ஆங்கிலத்தை எடுத்தா ளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?

"தமிழறிஞர்களுள் மிகச் சிறந்த நாவீறு படைத்த வராக விளங்கியவர் 'சொல்லின் செல்வர்' என்று போற்றப்பட்டபேராசிரியர் இரா.பி. சேதுப் பிள்ளை. அவரது சொன்மாரி செந்தமிழ்ச் சொற்கள் நடம் புரிய, எதுகையும் மோனையும் பண்ணிசைக்க, சுவை தரும் கவிதை மேற்கோளாக, எடுப்பான நடையில் நின்று நிதானித்துப் பொழியும்"

**M. R. M. Muthu,** M. B. A, B. L.

காற்றுக்கு தமிழ் வைத்த பெயர்கள்.

தெற்கிலிருந்து வீசுவது தென்றல் காற்று
வடக்கிலிருந்து வீசுவது வாடைக் காற்று
கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல் காற்று
மேற்கிலிருந்து வீசுவது மேலைக்காற்று

6 கி.மீ. வேகத்தில் வீசினால் மென்காற்று
6-11 கி.மீ. வேகத்தில் வீசினால் இளந்தென்றல் காற்று
12-19 கி.மீ. வேகத்தில் வீசினால் தென்றல் காற்று
20-29 கி.மீ. வேகத்தில் வீசினால் புழுதிக் காற்று
30-39 கி.மீ. வேகத்தில் வீசினால் ஆடிக்காற்று
100 கி.மீ. வேகத்தில் வீசினால் கடுங்காற்று
101-120 கி.மீ. வேகத்தில் வீசினால் புயற்காற்று
120 கி.மீட்டருக்கு மேல் வீசினால் அது சூறாவளிக் காற்று.

பகிரியிலிருந்து...


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-

# கடைக்கழகக் காலக் குறுநில மன்னர்

அகுதை, அத்தி, அதிகமான், தகடூர் பொருது வீழ்ந்த எழினி, அதிகமான் நெடுமானஞ்சி, அதிகமான் நெடு மானஞ்சி மகன் பொகுட்டெழினி, அந்துவஞ் சாத்தன், அந்து வங்கீரன், அம்பர் கிழான் அருவந்தை, அவியன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆந்தை, ஆமூர் மல்லன், ஆய் அண்டிரன், இயக்கன், இருங்கோவேள், இளங் கண்டீரக்கோ, இளங்கு மணன், இளவிச்சிக்கோ, இளவெனி மான், ஈர்ந்தூர் (ஈந்தூர்), கிழான் தோயன் மாறன், எயினன், எழினி, ஏற்றை, ஏறைக் கோன், ஏனாதி திருக்கிள்ளி,

ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ் சாத்தன், ஓய்மான் நல்லியக் கோடன், ஓய்மான் வில்லியாதன், கங்கன், கட்டி, கடிய நெடுவேட்டுவன், கண்டீரக் கோப்பெரு நள்ளி, கந்தன் (நாஞ்சிற் பொரு நன்), கரும்பனூர்கிழான், குமணன், கொண்கானங் கிழான், சிறுகுடிகிழான் பண்ணன், சோழநாட்டுப் பிடபூர்க் கிழார் மகன் பெருஞ்சாத்தன்,

சோழிய வேனாதி திருக் குட்டுவன், தந்துமாறன், தருமபுத்திரன், தழும்பன், தாமான் தோன்றிக் கோன், தென்பரதவர், தேர்வண் மலையன், தொண்டைமான், நம்பி நெடுஞ்செழியன், நன்னன், நன்னன் சேய் நன்னன், நாஞ்சில் வள்ளுவன், நாலைக்கிழவன் நாகன்,


நெடுவேளாதன், பழையன், பிட்டங்கொற்றன், புல்லி, பூந்துறை (புன்றுறை), பொறை யாறு கிழான், மல்லி கிழான் காரியாதி, மலையமான் சோழிய வேனாதி திருக் கண்ணன், மலையமான் திரு முடிக்காரி, முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன், முதியன், மூவன், மையற் கோமான் மாவன், மோகூர்ப் பழையன், வல்லார்கிழான் பண்ணன், வல்வில் ஓரி, வாட்டாற் றெழினியாதன், விச்சிகோன், வெளிமான், வேங்கை மார்பன், வேள் எவ்வி, வேள் பாரி, வையாவிக்கோப் பெரும் பேகன் முதலியோர்.

இவருள், தொண்டைமான், நன்னன் முதலிய சிற்ற ரசர்களும், வள்ளல்களும் முடியணிந்தவராவர். கடைக் கழகக் காலத்திற் பொதுவாக மூவேந்தர் கைகளும் தாழ்ந்து விட்டதனால், குறுநில மன்னர் தலையெடுத்து முடியணிந்து கொண்டனர். சேரன் செங்குட்டுவன் ஏழரசரை வென்று, அவர் முடிகளை மாலையாக அணிந் திருந்தான். அவ்வெழுவருள் ஐவர் குறுநில மன்னர்.

*“வில்கெழு தானை விச்சியர் பெருமகன்*

*வேந்தரொடு பொருத ஞான்றை”* (குறுந்தொகை 328)

என்பது, குறுநில மன்னன் வேந்தரை எதிர்த்ததைக் கூறுதல் காண்க.



# அறிவியலால் ஆக்கம் தேடு!

எண்ணத்தில் உதிக்கின்ற எத்தனையோ சிந்தனைகள்
எழுந்துவரும் அலை அலையாய் இதயத்திலே அத்துணையும்
வண்ணமாக வடித்தெடுக்கும் வழிமுறைகள் அறிந்திங்கு
வழங்கிடு மண்மீது புதுப்புது விந்தைகளாய்
சின்னஞ்சிறு பொம்மைமுதல் சீறிவரும் ஏவுகணை
விண்ணதிரும் வெடிப்பொருளும் விண்செல்லும் விண்கலமும்
இன்னும் பல அறிவியலில் எல்லாரும் சிறந்தோங்கி
முன்னேறி முன்செல்ல முனைந்திடவே வழிதேடு.

மண்மீது நாம்தோன்றி மண்ணுக்குள் மறையுமுன்
மாபெரும் சாதனைகள் சந்ததிக்கு வடித்திடுவாய்
விண்வெளியில் வெற்றிடத்தில் வேகநடை போட்டுவந்த
சுனிதாவின் செயல் காட்டி எல்லோரையும் வழிநடத்து
தன்மீது நம்பிக்கை தான்கொண்டு செயல்படும்
தரைமீது உள்ளாரை விண்வெளியில் மிதக்கவிடு
உன்செயலை விரிவாக்கி உயர்வுக்கு வழியாமைக்க
உன்னாலும் முடியுமெனும் உண்மையை நிலைநாட்டு

அறிவியலின் வளர்ச்சிகொண்டு அடுத்தடுத்த கோள்களையும்
ஆராய்ந்து குடியேற அடித்தளம் அமைத்துவிடு
நெறிதவறி அறிவியலில் ஆக்கமதை அழிப்பதென
நினைப்பதையும் செய்வதையும் நெஞ்சைவிட் டகற்றிவிடு
குறிக்கோள்கள் எல்லாமே கோள்களையே சுற்றுவதில்
காலமதைக் கழிக்காமல் வாழ்விற்கும் வழிதேடு
பொறித்திடும் பொன்னேட்டில் புதியதோர் படைப்பினைப்
படைத்தவன் நீயெனும் பெயரையும் பொறித்துவிடு.

**கவிஞர் இராமன்,** சென்னை 24.




# கூகுளும் ஃபேஸ்புக்கும் தம் வருமானத்தைப் பகிர்வதே ஜனநாயகத்துக்கு நல்லது

பத்திரிகைகளுக்குத் தெம்பூட்டும் ஒரு நடவடிக்கையை ஆஸ்திரேலிய அரசு எடுத்துள்ளது. இணைய ஜாம்பவான்களான கூகுளும் ஃபேஸ்புக்கும் ஆஸ்திரேலிய ஊடகங்களின் செய்திகளையும் கட்டுரைகளையும் தங்கள் ஊடகத்தில் காட்டுவதன் மூலம் பெறும் வருமானத்தை ஆஸ்திரேலிய ஊடகங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று சட்டம் இயற்றவிருக்கிறது ஆஸ்திரேலிய அரசு. மிகுந்த வரவேற்புக்குரிய நடவடிக்கை இது.

உலகம் முழுவதும் பத்திரிகைகள் கடும் போராட்டத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கும் காலம் இது. பத்திரிகையின் ஒவ்வொரு செய்தியின் பின்னாலும் செய்தியாளர்கள், செய்தி ஆசிரியர்கள், வடிவமைப்பாளர்கள், ஆசிரியர் என்று ஒரு படையின் உழைப்பு அடங்கியிருக்கிறது. அசாதாரண சூழலே செய்தியாளர்களின் யதார்த்தச் சூழல். நெருக்கடியான காலகட்டங்களில் அவர்கள் தங்களின் உயிரையும்கூடப் பொருட்படுத்தாமல் உழைக்கிறார்கள். அதன் பலனைத்தான் பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். பொய்ச் செய்திகள் இன்றைய அரசியலின் ஒரு அங்கமாகிவிட்டிருக்கும் காலத்தில், பத்திரிகைச் செய்திகள் கூடுதல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன; மக்களின் கடைசி நம்பிக்கையை அவையே உத்தரவாதப்படுத்துகின்றன.

தொலைக்காட்சிகளும் அதைத் தொடர்ந்து இணையத்தின் வழி சமூக ஊடகங்களும் வந்த பிறகு, பாரம்பரிய ஊடகமான பத்திரிகைகள் பெரும் போட்டியையும் வருமான இழப்பையும் சந்திக்கலாயின. கூகுள், ஃபேஸ்புக் போன்ற இணைய நிறுவனங்கள், பத்திரிகைச் செய்திகளைத் தம்முடையதாகப் பாவிக்கத் தொடங்கியபோது, இது மேலும் அதிகமானது. இது ஒருவகை உழைப்புத் திருட்டு என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், இப்படிப் பாவிப்பதன் வழி அவை விளம்பர வருவாயும் ஈட்டுகின்றன. இப்படிப்பட்ட சூழலில், ஆஸ்திரேலிய அரசு எடுத்திருக்கும் முடிவானது பத்திரிகைகளுக்கு மட்டுமல்லாது, ஜனநாயகத்துக்கும் நல்ல செய்தி. பத்திரிகைகளுக்கு மட்டும் அல்லாது, எழுத்தாளர்களின் இணையதளங்களுக்கும் வருவாய்ப் பகிர்வு கிடைப்பதற்கான சூழலை உருவாக்குவதாக அந்தச் சட்டம் விரிவாக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக முதன்முதலில் சட்டம் இயற்றுவது ஆஸ்திரேலிய அரசுதான் என்றாலும், ஏற்கெனவே கூகுளுடனும் ஃபேஸ்புக்குடனும் மோதிய அனுபவம் ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு உண்டு. காப்புரிமைச் சட்டம் சார்ந்து இந்தப் பிரச்சினையை அந்த நாடுகள் எடுத்துச்சென்றதால் அவற்றுக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றும், தாங்கள் தொழில் போட்டி சட்டத்தின் மூலம் இதை அணுகப்போகிறோம் என்றும் ஆஸ்திரேலியா கூறியிருக்கிறது. நல்ல விஷயம். ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஆஸ்திரேலிய வழியை இந்தியாவும் பின்பற்ற வேண்டும்.

நன்றி : **தமிழ் இந்து**



# கல்வி வள்ளல் மெக்காலே

கல்வி மறுக்கப்பட்ட நமக்கு அந்தக் கல்வி கிடைத்தது எப்படி ? ஏன் நமக்கு கல்வி மறுக்கப் பட்டது...

கொரோனா உபயத்தில் வீட்டில் ஓய்வில் இருக்கும் நாம் இந்த நேரத்திலாவது இதைப் படித்துத் தெரிந்துகொள்ளலாமே.

1813 துவங்கி 1833 வரைகிழக்கிந்தியகம்பெனி, இந்தியாவில் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சிக்காக, ஆண்டுதோறும் வழங்கிய 20லட்சம் ரூபாய் மானியம் என்னஆயிற்று? என்று பிரிட்டிஷ் பாராளு மன்றக் குழு ஆய்வு நடத்தியது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, 20 லட்சம் ரூபாய் என்றால் இன்றைய மதிப்பில் எத்தனை பில்லியன் என்று பாருங்கள்!

அவ்வளவு பணமும் இந்திய பொதுமக்களுக்குப் போய்ச் சேரவில்லை. கல்வியோ, பொதுஅறிவோ, முக்கியமாக அறிவியலோ வளரவே இல்லை. அந்த இருபது லட்சத்தையும் வேத பாடசாலை நடத்தி சமஸ் கிருதம் வளர்க்கவும், மதராசாவில் அரபி கற்பிக்கவும் தான் செலவாயிற்று என்று தெரிய வந்தபோது அது பிரிட்டிஷாருக்கு அதிருப்தியைத் தந்தது.

காரணம் பிரிட்டனில் கல்வி என்பது மதச் சார் பற்றது. எல்லா மனிதருக்கும் பொதுவானது. முக்கிய மாய் பிரிட்டனில் பெண்களும் படிக்க அனுமதிக்கப் பட்டார்கள்.

ஆனால் இந்தியாவில் பெண்களை விடுங்கள், பிராமணரைத் தவிரவேறு எந்த வர்ணத்தாரும் கல்வி கற்கவே கூடாது என்கிற விதி இருந்தது.

இந்தியாவின் இந்த விசித்திரமான வழக்கத்தை ஆய்வு செய்யும் பணி, தாமஸ் பாபிங்டன் மெக்காலே எனும் ஆங்கேலேய அதிகாரிக்கு வழங்கப் பட்டது.

இந்த தாமஸ் மெக்காலே யார்?

அவர் ஒரு எழுத்தாளர், வரலாற்று ஆய்வாளர், பல மொழி வித்தகர், அடிமை முறைக்கு எதிரானவர், முற்போக்கு கருத்தாளர், பெண்களுக்கு கல்வி வழங்க வேண்டும் என்கிற கொள்கை உடைய பிரிட்டிஷ் அதிகாரி.

இந்தலார்ட் மெக்காலே இந்தியாவிற்கு விஜயம் செய்தார். சமஸ்கிருதமும் பர்ஷியனும் கற்றுக் கொண்டார். அவருக்கு ஏற்கனவே கிரேக்கமும், லத்தீனும் அத்துபடி என்பதால், அதே வேர்ச்சொற் களைக் கொண்ட சமஸ்கிருதம் அவருக்கு எளிதில் புரிந்து போனது.

அவருடைய ஆழமான ஆய்விற்கு பிறகு, 1835ல் “இந்தியாவில் கல்வி“ என்ற அவருடைய குறிப்புக்களை வெளியிட்டார். இந்த Minute on Indian Education எனும் உரை, பிறகு Macauley’s Minutes என்று பிரசித்தி பெற்றது.

அதில் மெக்காலே சொன்னது என்ன வென்றால்?

1. சம்ஸ்கிருத நூல்களில் இருக்கும் குறிப்புகளை அனைத்தையும் ஒன்று திரட்டிப் பார்த்தாலும், அவைபிரிட்டிஷ் ஆரம்பக் கல்வி நூல்களை விட குறைவான தகவலே கொண்டுள்ளன.

2. இந்தியாவில் இதுவரை சமஸ்கிருதத்திலும் அரபியிலும் கற்பிக்கப்பட்டு வந்த பாடங்கள் அறிவியலுக்கு உகந்ததாக இல்லை

3. இந்தியர்கள் இதனாலேயே பிற்போக்கான, காட்டுமிராண்டித் தனமான மூடநம்பிக்கைகளை பின் பற்றுகிறார்கள்

4. அதனால் இந்திய மொழிகளில் பாடம் நடத்துவது வீண் செலவு. அது அனைவருக்கும் போய்ச் சேரவில்லை.

மெக்காலேவின் எண்ணம் எல்லோருக்கும் கல்வியில் சமவாய்ப்புக் கிடைக்க வேண்டும். இந்தியர்கள் அனைவரும் வெளித்தோற்றத்தில் பழுப்பு நிறத்தவராய் இருந்தாலும், எண்ணத்திலும் நாகரீகத் திலும், நேர்த்தியிலும், ரசனையிலும் பிரிட்டி ஷாரைப் போல முற்போக்காய் இருக்கவேண்டும் எனும் சமத்துவ நிலையை அடையவேண்டும். அதற்கு ஆகும் செலவை மனிதாபிமான அடிப்படையில் பிரிட்டிஷ் அரசே மேற்கொள்ள வேண்டும் என்றார்.

சில பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு இது ஆபத்தான போக்காக தோன்றிற்று. இந்தியர்களை தமக்கு சமமான நாகரீக நிலைக்கு கொண்டு வர முயல்வது வேண்டாத வீண் செலவு என்றே அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் தாம்ஸ் மெக்காலே பிரிட்டிஷ் வரலாற்று நூல் எழுதியவர் என்பதால் அரச குடும்பத்திற்கு நெருக்கமானவர். மிகச்சிறந்த அறிஞர், நாணய மிக்க வர், மனிதாபிமானி, அப்பழுக்கற்ற அறச் சிந்தனை யாளர் என்பதால் யாராலும் அவரை நேரடியாக எதிர்க்க முடியவில்லை.

இதற்குஇடையில் 1833ல் இந்தியாவில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அதுவரை கிழக்கிந்திய கம்பெனி யின் ஆதிக்கதில் இருந்த இந்தியா, 1833 முதல் நேரடி பிரிட்டிஷ் காலனியாக அறிவிக்கப்பட்டது.

லார்ட்பில்லியன் பெண்டிங்பிரபு என்பவர் பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப் பேற்றார்.

அவர் பொறுப்பேற்ற பிறகு இயற்றிய முதல் சட்டம்: பெங்கால்– சதிதடைச் சட்டம்.

ஆங்கிலேயருக்கு இந்தியாவில் ரொம்பவே பிடிக்காத காட்டு மிராண்டித் தனம் ஒன்று உண்டு என்றால் அது “சதி ஏறுதல் “எனும் மிகவும் கொடூர மான சம்பிரதாயம்.

இங்கிலாந்தில் கணவன் இறந்துவிட்டால், மனைவி விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம். அல்லது தனிப் பெண்ணாய் தன் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி சுயமாய் வாழலாம்.

ஆனால் இந்தியாவிலோ கணவன் இறந்தால், அதற்குமேல் பெண்ணுக்கு மறுமணம்செய்தாரில்லை. அந்தப் பெண்ணை சுயமாக வாழவிட்டாரும் இல்லை. அந்தப்பெண், கணவனின் சிதையில்தானும் குதித்து செத்தே ஆகவேண்டும் என்பதை கட்டாயமாக்கி இருந்தார்கள்.

பிள்ளைகுட்டி இருக்கிறபெண், இப்படி பிள்ளை களை அனாதையாக விட்டு விட்டு சதியில் குதிப்பதில் என்னலாஜிக் இருக்கிறது? அந்தப்பெண் உயிரோடு இருந்தால் தானே அவள் குழந்தைகளுக்கு அனுகூலம். அப்போது தானே அவள்மரபணுக்களுக்குலாபம். அவள் கணவனுடைய மரபணுக்களுக்கும் லாபம்.

இதை விட்டுவிட்டு ஆரோகியமான ஒருஇளம் பெண் இறந்து போவதில் யாருக்கு என்ன லாபம் இருக்க முடியும்??

ஆனால் லாபம் இருப்பதாகவே இந்தியர்கள் நம்புவிக்கப் பட்டார்கள்! என்ன லாபம் தெரியுமா? கணவன் அவனுடைய ஈரேழு ஜென்மங்களில் செய்த அத்தனை பாவமும் போய், அடுத்த ஜென்மத்தில் காசியில், புனித நதியாக கங்கையின்கரையில் பிராமண னாக பிறக்கும் நல்வாய்ப்பை பெறுவான். அதனால் தன் கணவனுக்கு இந்தப்பாக்கியம் கிடைக்க வேண்டி, கற்பில் சிறந்த பெண்கள் உடன்கட்டை ஏறுவது அவசியம்!

**அந்த பெண்ணுக்குவலிக்குமே?**

ஆங்! உண்மையான கற்புக்கரசிக்கு வலிக்காது! எல்லாருக்கும் கிடைக்குமா இந்த பாக்கியம். அதுக் கெல்லாம்கொடுப்பனைவேண்டும்!.... என்றுசொல்லி, அழகுப் போட்டி என்று சொல்லி பெண்களை அரை நிர்வாணமாய் நிற்க வைத்து ஆண்கள் கண்களாலேயே வேட்டையாடுவது போல, கற்புக்கரசிக் கான போட்டி. கற்புள்ளவளுக்கு வலிகாது என்று கதை கட்டி விட் டார்கள் கருடபுராணம் எழுதிய பிராமணர்கள்.

இந்தகதைகளை எல்லாம் இந்தியாவில் படிப்பறி வில்லாத முட்டாள்கள் எல்லாம் நம்பி, ஷத்திரிய

*பெண்களையும், வைஷிய பெண்களையும் மானா வாரியாக உடன் கட்டை ஏற்றி கொன்று விட்டார்கள்!*

*ஆனால் சூத்திரபெண்கள் அதிகமாக உடன் கட்டைஏறவில்லை. காரணம் சூத்திரப் பெண்கள் வேலைக்கு போனார்கள். அவர்கள் ஊதியம் ஈட்டி னார்கள். உழவு, நெசவு, கொசவு, பூதொடுத்தல், அரண் மனையில் வேலை செய்வது என்று சூத்திர பெண்கள் குடும்பத்திற்கு தங்கள் வருவாயை கொண்டுவந்ததால், அவர்களையாரும் உடன்கட்டை ஏற்றத் தயாராக இல்லை.*

*பிராமண, ஷத்திரிய, வைஷியப் பெண்கள் வீட்டு வாசற்படியைதாண்டாமல், பொருளாதாரத்தில் பங்கே எடுக்காமல் இருந்ததால், அவர்களுக்கு சமூகமதிப்பு இல்லை. அதனால் அந்தப் பெண்சதி ஏறி செத்தால், அவளுடைய பிள்ளைகளைத் தவிர வேறு யாருக்கும் எந்த இழப்பும் தெரிய வில்லை.*

*இந்தியர்கள் இந்த கருடபுராண பொய்களை நம்பி இப்படி இளம் பெண்களை கொல்வதைப் பார்த்த ஆங்கிலேயருக்கு அறச்சீற்றம் பீறிட்டது. அவர்களுக்கு கங்கை புனிதநதி இல்லை, காசிபுனிததளம்இல்லை, ஈரேழு ஜென்மம் எனும் நம்பிக்கை இல்லை. பிராமணர் உயர்ந்தவர் என்றோ, பிராமணருக்கு தக்ஷனை கொடுத்தால்தான் புண்ணியம் என்றோ அவர்கள் நம்பவில்லை.*

*பிராமணர் எழுதிய சமஸ் கிருத நூல்கள் பலதை அவர்கள் படித்தார்கள். அந்த நூல்களில் இருந்த சுயநலமும், தந்திரமும், ஏமாற்றுத் தனமும் அவர்களுக்கு அருவருப்பாக இருந்தது. இந்த சமஸ்கிருதம் வளர்க்க நாம் வேறு, இருபது ஆண்டுகளாக மானியம் வழங்கி ஏமாந்திருக்கிறோமே என்கிற கோபமும் இருந்தது!*

*சதி தடைச் சட்டத்தை இயற்றிய கையோடு, லார்ட் மெக்காலேவின் அறிவுரையின் படி, அடுத்த அதிரடிச் சட்டத்தை இயற்றினார் லார்ட்பெண்டிங்: இனி பிரிட்டிஷ் இந்தியா முழுக்க, ஆங்கிலமே கல்விக்கான மொழி! ஒரே ஒரு சாராருக்கான சமஸ்கிருதத்தை இனி ஊக்குவிப்ப தில்லை, எனும் ஆங்கில வழி கல்வி சட்டம் 1835 முதல் அமலானது.*

*குருகுலம், வேதபாடசாலை, மதார்சா எனும் மத கல்விக்கு அதற்கு மேல் பிரிட்டிஷ் காசு செல்வழிக் காமல், நேரடியாக பொதுமக்கள் பயன் பெறும் வகையில், பிரிட்டிஷ் தரத்தோடு, பிரிட்டனில் இருக்கும் அதே பாடத் திட்டத்தோடு இந்தியாவில் பள்ளிக் கூடங்களை ஆரம்பித்தார்கள்.*

*ஆங்கிலம், கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், அறம், உடல் பயிற்சி என்று சர்வதே சதரம் வாய்ந்த கல்வி இந்தியர்களுக்கு இலவசமாய்க் கிடைக்க ஆரம்பித்தது.*

*1835ல் கல்கத்தாவில் ஒரு மருத்துவக்கல்லூரி, அடுத்த ஆண்டே கல்கத்தா வில் பொதுநூலகம், 1847ல் ரூர்கியில் இந்தியாவின் முதல் பொறியியல்கல்லூரி.*

*1848ல் கல்கத்தாவில்பெண்களுக்கான பிரத்தியேகப் பள்ளி 1835 முதல் ஆங்கில பள்ளிகளில் கற்றுத் தேர்ந்த மாணவர்கள் கல்லூரிக்கு போக வேண்டுமே? அதனால் 1858ல்கல்கத்தா, சென்னை, மும்பய் ஆகிய நகரங்களில் பல்கலை கழகங்கள் துவங்கப்பட்டன.....*

*இரண்டாயிரம் ஆண்டுகால இடைவெளிக்கு பிறகு இந்தியர்களுக்கு கல்வி எனும் ஆயுதம் கிடைத்தது.*

*இப்போது சொல்லுங்கள், இத்தனைக்கும் காரண மான அந்ததாமஸ் பாபிங்டன் மெக்காலே தானே நமக்கு கல்வி வள்ளல் .*

*அன்புடன்*

***பி.என்.எம்.பெரியசாமி,***

# மெக்காலே குறிப்புகள்
## ( MACAULAY'S MINUTES)

**1813 க்கும் 1833 ஆம் ஆண்டுக்கும் இடையிலான 20 ஆண்டு காலத்தில் மேலும் ஒரு திட்டத்தை ஆங்கிலக் கல்வியை விரிவுபடுத்த பிரிட்டிஷ் அரசு முன்மொழிந்தது. இந்தியாவின் மேல்தட்டு வர்க்கக் குடும்பங்களை ஆங்கிலக் கல்வியை நோக்கி இழுத்து அவர்களை அரசு வேலைகளில் அமர்த்த வேண்டும். இந்த நடவடிக்கை மற்றவர்களையும் ஆங்கிலக் கல்வியை நோக்கி இழுக்கும் என்று எதிர்பார்த்தது.**

1834-ல் மெக்காலே இந்தியாவிற்கு வருகை புரிந்தார். அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த பெண்டிங் பிரபு, மெக்காலேவை “பொது போதனை துறை” (Public instruction) எனும் கல்வித் துறையின் தலைவராக நியமனம் செய்தார். நான்கு மாதங்கள் இந்தியாவின் கல்வி முறையை ஆய்வு செய்த மெக்காலே, MACAULAY'S MINUTES (மெக்காலே குறிப்புகள்) எனும் அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

மெக்காலேவின் நோக்கம் “வர்ணாஸ்ரம தர்மத்தை” கடைப்பிடித்து வந்த இந்திய பாரம்பரியக் கல்வி முறையை மாற்றி அனைவருக்கும் கல்வி வழங்குவதாக இருந்தது.

“நாம் இப்போது செய்ய வேண்டிய முக்கிய பணி, நமக்கும் நாம் ஆளுகின்ற மக்களுக்கும் இடையே நல்லெண்ணத் தூதுவராக செயல்படவேண்டிய புதிய வர்க்கம் ஒன்றைக் கல்வியின் மூலம் தோற்றுவிப்பது ஆகும். இவர்கள் ரத்தத்தால், நிறத்தால் இந்தியர்கள். ஆனால் உணர்வால், நிலைப்பாட்டால் நடத்தையால், எண்ணத்தால், விருப்பு வெறுப்பால் ஆங்கிலேயர்கள்” என்றார்.



# ஆனையிறவுப் படைத்தளம்

ஆனையிறவுப் படைத்தளத் தாக்குதல் இலங்கை இராணுவத்தினரின் ஆனையிறவு ஆக்கிரமிப்பிற்கெதிராக 2000 ஆம் ஆண்டு மார்ச் 26, ஞாயிற்றுக் கிழமை மாலை நேர அளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். ஓயாத அலைகள் மூன்று என்ற நடவடிக்கை மூலம் ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. 35 நாட்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆனையிறவுப் படைத்தளமானது பத்தாயிரத்திற்கும் அதிகமான இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

குடாரப்புவில் தரையிறக்கப்படுவதற்கென வெற்றிலைக்கேணியில் இருந்து கடல்வழியே தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவிலான படை நகர்வொன்றை முன்னெடுத்தனர். கடற்புலிகளின் படகுகளில் 1200 வரையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் தாளையடி முகாம் மீதிருந்து வரும் தாக்குதல்களையும் எதிர்நோக்கிச் செல்லும் சூழலிற்குத் தள்ளப்பட்டும் மேலும் குடாரப்புப் பகுதியில் தரையிறங்கும் குறிக்கோளுடன் சென்றனர்.

**குடாரப்பு தரையிறக்கச் சமர்**

ஈழப்போராட்டவரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய சாதனைகளில் இது முக்கியமானது. மிகப்பெரிய நாடுகளின் படைத் துறைக்கு ஈடான உத்தியுடனும் வளத்துடனும் ஒரு மரபுவழித் தரையிறக்கத்தை தமிழரின் விடுதலைச்சேனை நிகழ்த்தியிருந்தது. அதன்மூலம் வெல்லப்பட முடியாததாக பலராலும் கருதப்பட்ட மிகமுக்கிய இராணுவத் தளமான ஆனையிறவும் அதைச்சுற்றியிருந்த மிகப்பெரும் படைத்தளமும் புலிகளால் மீட்கப்பட்டது.

சவால்களை ஏற்றுச் சமர் செய்யக்கூடாதென்பது கெரிலாப் போராளிகளுக்கான பொதுவிதி.

ஓயாத அலைகள் மூன்று என்ற தொடர் நடவடிக்கையில் முதலிரு கட்டங்களும் வன்னியின் தெற்கு மற்றும் மேற்குமுனைகளில் முன்னேறியிருந்த படையினரை விரட்டி மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டிருந்தது. மூன்றாம் கட்டம் மூலம் வன்னியின் வடக்கு முனையில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளடக்கிய கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து பரந்தன் படைத்தளமும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட கடற்கரைப் பகுதியிலிருந்து நாலாம் கட்டத்துக்கான பாய்ச்சல் தொடங்க இருந்தது

26.03.2000 அன்று மாலை வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் போராளிகள் அணிவகுத்து நிற்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஈழப் போராட்டத்தில் பாரிய திருப்புமுனையை ஏற்படுத்திய போரியற் சாதனையொன்றை நிகழ்த்த அவர்கள் ஆயத்தமாகி நின்றார்கள். வெற்றிலைக்கேணியிலிருந்து கடல்வழியாக எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கும் தாழையடி உட்பட்ட மிகப்பலமான கடற்கரையை

மேவிச்சென்று குடாரப்புப் பகுதியில் புலிகளின் அணிகள் தரையிறங்க வேண்டும்; தரையிறங்கிய அணிகள் ஆனையிறவுத்தளத்துக்கான முக்கிய வினியோகப் பாதையான கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொள்ள வேண்டும் என்பதே திட்டம்.



தரையிறக்கம் செய்யப்பட வேண்டிய படையணி மிகப்பெரியது. ஆயிரத்து இருநூறு வரையான போராளிகளை ஒரேயிரவில் தரையிறக்க வேண்டும். தரையிறக்கத்தைத் தடுக்க எதிரி சகலவழிகளிலும் முயல்வான். கடலில் முழுக்கடற்படைப் பலத்தோடும் எதிரி தாக்குவான். கடற்கரையிலிருந்தும் டாங்கிகள் மூலம் நேரடிச்சூடு நடத்தி கடற்புலிகளின் படகுகளை மூழ்கடிப்பான். விடிந்துவிட்டால் எதிரியின் வான் படையின் அகோரத் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

மிக ஆபத்தான பணிதானென்றாலும் அதைச் செய்தே ஆகவேண்டும். கடற்புலிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்துமுடித்தனர். மாலை புறப்பட்ட படகணி ஆழக்கடல் சென்று இரண்டுமணிநேரப் பயணத்தில் தரையிறங்கவேண்டிய பகுதியை அண்மித்தது. எதிர்பார்த்தது போலவே கடலில் கடும்சண்டை மூண்டது. இரவு 8.30 க்கு கடலில் சண்டை தொடங்கியது. 16 டோறாப் பீரங்கிப் படகுகள் அடங்கிய தொகுதியுடன் சண்டை நடந்தது. தாக்குதலணிகளைத் தரையிறக்கவேண்டிய படகுகளுக்கு எதுவித சேதமும் ஏற்படாவண்ணம் கடற்புலிகளின் தாக்குற்படகுகள் சண்டை செய்தன. கடுமையான சண்டைக்கிடையில் விடிவதற்குள் வெற்றிகரமாக அணிகள் கடற்கரையில் தரையிறக்கப்பட்டன. முதற்கட்டமாக தரையிறக்க அணிகளைக் காவிச் சென்ற ஏழு வினியோகப் படகுகளும் வெற்றிகரமாகக அணிகளைத் தரையிறக்கின.

தரையிறங்கிய அணிகள் தொண்டமானாறு நீரேரியைக் கடந்து அதிகாலைக்குள் கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொண்டனர். அவர்கள் தரையிறங்கிய நேரத்தில் ஏற்கனவே உட்புகுந்திருந்த கரும்புலிகள் அணி பளையிலிருந்த ஆட்லறித்தளத்தைக் கைப்பற்றி பதினொரு ஆட்லறிகளைச் செயலிழக்கச் செய்திருந்தனர். தரையிறங்கி நிலைகொண்ட அனைத்து அணிகளையும் கேணல் பால்ராஜ் நேரடியாக களத்தில் நின்று ஒருங்கிணைத்து வழிநடத்தினார். அவருக்குத் துணையாக துணைத்தளபதிகளாக சோதியா படையணித் தளபதி துர்க்கா, மாலதி படையணித் தளபதி விதுஷா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதி (பின்னர் பிறிதொரு நேரத்தில் சாவடைந்த) லெப்.கேணல் ராஜசிங்கன், விக்ரர் கவச எதிர்ப் பணிக்குத் தலைமைதாங்கிக் களமிறங்கியிருந்த இளங்கீரன் ஆகியோர் செயலாற்றினர்.

புலிகள் இயக்கம் இப்படியொரு தரையிறக்கத்தைச் செய்யுமென்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். இவ்வகையான முயற்சிகள் புலிகளின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதோடு தற்கொலைக்கு



ஒப்பானது என்றே எல்லோரும் கருதியிருந்தனர். உண்மையில் தற்கொலைக்கு ஒப்பானதுதான். வன்னித் தளத்தோடு நேரடி வழங்கலற்ற நிலையில் பெருந் தொகைப் போராளிகள் எதிரியின் பகுதிக்குள் சிறிய இடமொன்றில் நிலையெடுத்திருப்பது தற்கொலைக்கு ஒப்பானதுதான். தரையிறங்கிய அணிக்கான உணவு வினியோகத்தைக்கூடச் செய்யமுடியாத நிலை. கடலில் மிகக்கடுமையான எதிர்ப்பை எதிரி கொடுத்தான். தரையிறக்கம் தொடர்பான செய்தியை அறிந்தபோது முதலில் திகைத்தாலும், அவ்வளவு பேரையும் கொன் றொழிப்பது என்பதில் எதரி தெளிவாக இருந்தான். தன்னால் அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழிக்க முடியுமென்று எதிரி நம்பினான். புலிகளின் போரிடும் வலுவுள்ள முக்கிய அணிகள் அங்கிருந்ததும், முக்கியமான போர்த்தளபதிகள் அங்கிருந்ததும் அவனுக்கு வெறியேற்றியது. அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழித்தால் புலிகளின் கதை அத்தோடு முடிந்துவிடுமென்று கணித்திருந்தான்.

வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்புவரை அரச படையினரின் மிகவலுவான படைத்தளப் பகுதியாக இருந்தது. தரையிறக்கத்தின் முன்பே, கடல்வழியான தொடர்ச்சியான வினியோகம் சாத்தியப்படாதென்பது தெளிவாக உணரப்பட்டது. ஆகவே தரைவழியாக வினியோகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே நியதி. அதன்படி வெற்றிலைக் கேணியிலிருந்து கடற்கரை வழியாக குடாரப்பு வரை நிலத்தைக் கைப்பற்ற வேண்டும். தரையிறங்கிய அடுத்த நாளே தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதிகளைக் கைப்பற்றி குடாரப்பு வரை தொடர்பை ஏற்படுத்தும் சமர் தொடங்கிவிட்டது. இத்தாவில் பகுதியில் கண்டிவீதியைக் குறுக்கறுத்திருந்த புலியணி களை முற்றாக அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டி ருந்த எதிரிப்படையோடு கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், இத்தாவிலில்

இத்தாவிலில் நிலைகொண்டிருக்கும் படையணிக்கு வினியோகத்தை ஏற்படுத்த புலியணிகள் கடுமையான சண்டையைச் செய்தன. இரண்டுநாள் எத்தனிப்பின் முடிவில் தாளையடி உட்பட்ட மிகப்பலமான படைத் தளங்களைக் கைப்பற்றி தரையிறக்க அணிக்குரிய தரை வழியான வழங்கலை உறுதிப்படுத்திக் கொண்ட னர் புலிகள்.


அதுவரை சரியான வினியோகமில்லாது, இருந்த வற்றை மட்டும் பயன்படுத்தி நிலத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்த தரையிறக்க அணி ஆசுவாசப்படுத்திக் கொண்டது. அணிகள் சீராக்கப்பட்டு தொடர்ந்து சண்டை நடந்தது. கண்டிவீதியைக் குறுக்கறுத்திருக்கும் புலிகளை முற்றாக அழிப்பதற்கு எதிரி தனது முழு வளத்தையும் பயன்படுத்தினார். கவசவாகனங்கள், ஆட்லறிகள், படையணிகள் என்று சகலதும் பயன் படுத்தினான். மிகமிக மூர்க்கமாகத் தாக்கினான். ஆனாலும் புலிவீரரின் அஞ்சாத எதிர்ச்சமரில் தோற்றோடினான். கவசப்படைக்குரிய பல வாகனங்கள் அழிக்கப்பட்டன; சேதமாக்கப்பட்டன. புலியணி நிலை கொண்டிருந்த பகுதி சிறியதாகையால் மிகச்செறிவான ஆட்லறிச்சூட்டை நடத்துவது எதிரிக்கு இலகுவாக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பநம் ஏற்பட்டபின் அவ் வழியால் சென்றவர்கள் அப்பகுதியைப் பார்த்திருப்பர். அழிக்கப்பட்ட கவசவானங்கள் வீதியோரத்தில் நிற்பதையும் இத்தாவில் பகுதியில் ஒருதென்னைகூட உயிரோடின்றி வட்டுக்கள் அறுக்கப்பட்டு மொட்டை யாக நிற்பதையும் காணலாம். அவ்வளவுக்கு அகோர மான குண்டுத்தாக்குதல் புலியணிமீது நடத்தப்பட்டது. ஆனாலும் அப்பகுதியைத் தொடர்ந்து தக்கவைப்பதில் உறுதியாக இருந்து வெற்றியும் கண்டனர் புலிகள். ஆனையிறவுத்தளம் முற்றாகக் கைப்பற்றப்படும்வரை முப்பத்துநான்கு நாட்கள் இத்தாவில் பகுதியில் நிலை கொண்டு அதைத் தக்கவைத்துக்கொண்டனர் கேணல் பால்ராஜின் தலைமையிலான புலியணியினர்

வரலாற்றுப்புகழ் வாய்ந்த மாமுனைத் தரையிறக் கத்தில் நீருக்குள்ளால் 120 mm கனரகப் பீரங்கியை இழுத்துச்செல்லும் பெண்புலிகள்....

தரையிறங்கிய சிலநாட்களுக்குள் ஆனையிறவைக் கைப்பற்றும் முயற்சியொன்றைப் புலிகள் மேற்கொண்டு அது தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் சிலநாட் களில் வேறொரு திட்டத்தைப் போட்டு மிகஇலகுவாக, மிகக்குறைந்த இழப்புடன் ஆனையிறவுப்பெருந்தளம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனர் புலிகள். இயக்கச்சியைக் கைப்பற்றியதோடு தானாகவே எதிரிப் படை ஆனையிறவிலிருந்து தப்பியோடத் தொடங்கி விட்டது. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பின்வாங்கல் போலன்றி அனைவரும் தங்கள்தங்கள் பாட்டுக்குச் சிதறியோடினர். தாம் பயன்படுத்திய ஆட்லறிகள் முழுவதையும்கூட அழிக்க முடியாத அவசரத்தில் விட்டுவிட்டு ஓடினர். அவர்களுக்கு இருந்த ஒரே பாதை யான ஆனையிறவு கிளாலி கடற்கரைப்பாதை வழியாக ஓடித்தப்பினர்.

முடிவில் ஆனையிறவு தமிழர்களிடம் வீழ்ந்தது. ஆனையிறவு மட்டுமன்றி மிகப்பெரும் நிலப்பகுதி கண்டிவீதியில் முகமாலை வரை கிழக்குக் கடற்கரை யாகப் பார்த்தால் சுண்டிக்குளம் முதல் நாகர்கோவில் வரை என்று மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டது. அனைத்துக்கும் அடிநாதமாக இருந்தது அந்தத் தரையிறக்கம்தான்.

சிங்களப்படையே அப்படியொரு தரையிறக்கத்தைச் செய்ய முனையாது. 1996 இல் அரசபடையால் அளம் பிலில் அவ்வாறு செய்யப்பட்ட தரையிறக்கமொன்று பெருத்த தோல்வியில் முடிவடைந்து இராணும் மீண்டும் தப்பியோட நேரிட்டது. ஆனால் புலிகள் மிக வெற்றிகரமாக படையணிகளைத் தரையிறக்கி ஒரு மாதத்துக்கும் மேலாக மிகக்கடுமையான எதிர்த்தாக்கு தலைச் சமாளித்து நிலைகொண்டிருந்ததோடு இறுதி யில் எதிரியை முற்றாக வெற்றிகொண்டனர். ●



# தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம்

தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம் என்பது ஒரு ஜப்பான் நாட்டுக் கதையாகும். முன்னொரு காலத்தில் ஜப்பான் நாட்டில் சட்டம் ஒன்று நடைமுறையில் இருந்தது.

அதாவது வேலை செய்ய முடியாத முதுமைப் பருவத்தினை அடையும் வயதானவர்களை தூக்கிச் சென்று, மலைப் பகுதியில் விட்டு விட வேண்டும்.

இதனால் வயதானவர்களைப் பராமரிக்க வேண்டிய சுமை நாட்டு மக்களுக்கு இல்லை என்பது அரசனின் எண்ணம்.

அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்த போது ஒரு தந்தையும் மகனும் ஒருவரிடம் ஒருவர் மிகுந்த அன்பு கொண்டவர்களாக விளங்கினர்.

நாளடைவில் அந்தத் தந்தை வேலை செய்ய இயலாத முதுமைப் பருவத்தை அடைந்தார்.

ஆதலால் அந்நாட்டின் சட்டப்படி அவரை மகன் மலைப்பகுதியில் கொண்டு விட்டு விட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானான். தந்தையைப் பிரிய அவனுக்கு மனமே வரவில்லை.

எனினும் அரச தண்டனைக்குப் பயந்து அவன் தன்னுடையத் தந்தையை மலைப்பகுதிக்கு முதுகில் சுமந்து சென்றான்.

மலைப்பகுதியை அடைந்த போது அவனுடைய மனம் மிகவும் வருந்தியது. ஆதலால் அவன் தந்தையை தன்னுடனே அழைத்துக் கொண்டு திரும்பி வீட்டிற்கு வந்து விட்டான்.

வீட்டின் பின்பகுதியில் தந்தையை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தான். மிகவும் ரகசியமாக அவருக்கு உணவளித்து வந்தான்.

சாம்பல் கயிறு.

ஒரு நாள் அரசன், தன் மக்களின் அறிவுத் திறனை சோதிக்க எண்ணி, போட்டி ஒன்றை அறிவித்தான்.

சாம்பலால் திரிக்கப்பட்ட கயிறினை கொண்டு வர வேண்டும் என்பதே அப்போட்டியாகும்.

போட்டியைக் கேட்டதும் எல்லோரும் சாம்பலால் எவ்வாறு கயிறு திரிக்க இயலும் என்று எண்ணினர். யாராலும் சாம்பல் கயிறு உருவாக்க முடியவில்லை.

அரசனின் போட்டி பற்றி அந்த? மகன் தன் தந்தையிடம் தெரிவித்தான். போட்டியைக் கேட்ட தந்தை, மகனிடம் பெரிய தாம்பாளத்தில் கயிறினை முறுக்கி வைத்து, அதனை எரியச் செய்தால் சாம்பலால் திரித்த கயிறு கிடைக்கும் என்றார்.

மகனும் தந்தை கூறியபடி தாம்பாளத்தில் கயிறினை வைத்து எரித்தான். கயிறு எரிந்து சாம்பாலான பின்பும் அதே கயிறு வடிவில் இருந்தது. இதனை அரசனிடம் காண்பித்து பரிசினைப் பெற்றான்.

அடி எது? நுனி எது?

ஒரு மாதம் கழித்து அரசன் இரண்டாவது போட்டியை அறிவித்தான். அரசன் ஒரு மரக்கொம்பைக் கொடுத்து இதனுடைய அடிப் பாகம் மற்றும் நுனிப் பாகத்தைக் கண்டு பிடிக்குமாறு மக்களுக்கு ஆணையிட்டான்.

கிட்டத்தட்ட இரு பகுதியும் ஒன்றாகத் தெரிந்த தால் யாராலும் அடி எது? நுனி எது? என்று சொல்ல முடியவில்லை.

மரக்கொம்பை வீட்டுக்கு எடுத்து வந்த மகன் தந்தையிடம் காண்பித்து அரசனின் கேள்வியைக் கேட்டான். தந்தை மரக்கொம்பை தண்ணீரில் போட்டால், அது லேசாக மூழ்கும் பகுதி அடி, மிதக்கும் பகுதி நுனி என்றார்.

மகனும் தந்தை கூறியவாறே அரசனுக்குச் செய்து காண்பித்து இம்முறையும் பரிசினைப் பெற்றான்.

தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம்.

அரசன் மூன்றாவது போட்டியை மிகவும் கடுமையானதாக வைத்தான். அதாவது தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம் ஒன்றினைத் தயார் செய்து வருமாறு மக்களிடம் கூறினான்.

வழக்கம் போலவே எல்லா மக்களும் பின்வாங்கி விட்டனர்.

அரசனின் கேள்வியால் மகன் மிகவும் சோர்ந்து தந்தையிடம் வந்து நடந்ததைக் கூறினான்.

தந்தை அவனிடம் “மேளத்திற்குத் தேவையான தோல்களை எடுத்துக் கொள். மலைப்பகுதிக்குச் சென்று தேனீக்கூடு ஒன்று கொண்டு வா. அதனை உள்ளே வைத்து மேளத்தை தயார் செய்“ என்றார்.

மகனும் தந்தை கூறியவாறே மேளத்தை தயார் செய்து அதனை அசைக்காமல் கொண்டு சென்று அரசனிடம் தந்தான்.

அரசன் மேளத்தைக் கையில் எடுத்து மேளத்தை அசைத்தான். மேளத்திற்கு உள்ளே இருந்த தேனீக்கள் அசைவினால் மேளத்திற்குள் இங்கும் அங்கும் பறந்தன. இதனால் மேளத்தில் தட்டாமல் ஒலி உண்டானது.

இதனைக் கண்டு ஆச்சர்யமடைந்த அரசன் “உன்னால் எப்படி மூன்று கேள்விகளுக்கும் சரியான விடைகளை செய்து காண்பிக்க முடிந்தது?“ என்று கேட்டான்.

அனுபவம் தந்த பதில்கள்.

“அரசே உங்களுடைய கேள்விகளுக்கு விடை காணும் அளவிற்கு எனக்கு அனுபவம் கிடையாது. என்னுடைய வயதான தந்தை என்னுடன் இருக்கிறார். அவர் மூலமே எனக்குத் தங்களின் கேள்விக்கான பதில் கிடைத்தது.“ என்று கூறினான்.

இளைஞனின் பதில் அரசனை நெகிழச் செய்தது.

சிக்கலான பிரச்சினைகளைத் தீர்வு செய்ய? வயதானவர்களின் அனுபவம் உதவியாக இருக்கும் என்பதை அரசன் உணர்ந்து கொண்டான்.

உடனே அவன் “இனி வேலை செய்ய இயலாத வயதானவர்களை, மலைப்பகுதிக்கு கொண்டு போய் விடத் தேவையில்லை“ என்று உத்தரவு போட்டான்.

அதுமுதல் வயதானவர்கள் தங்கள் கடைசிக் காலத்தை பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

அனுபவ அறிவு என்றைக்கும் விலை மதிப்பில்லாதது என்பதைத் தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம் கதை மூலம் அறியலாம்.

ஆம், வயதான பெரியவர்கள்

வீட்டில் இருப்பதே நமக்கு இறைவன் கொடுத்த அருள் என்று உணர்வோம்.

நம்மை ஆளாக்கிய பெற்றோரின் வயதான காலத்தில் அவர்கள்

நம்மோடு இருப்பதும் அவர்களை பராமரிப்பதும்

நமக்கான கடமை மட்டுமல்ல

நமக்கு கிடைத்த அருள் என்று உணர்வோம்.

தொப்புள் கொடியில் இருந்தே தொடங்கிய தாயும்

மார்பிலும் தோளிலும் தூக்கிச் சுமந்து கால் தேய உழைத்து நம்மை உருவாக்கிய தந்தையும்

நம்மிடம் நன்றியை எதிர்பார்க்கவில்லை என்றாலும்

எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்

உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகற்கு.

## இந்தியா–ஹிந்து நாடல்ல மதச்சார்பற்ற நாடு

# சென்னை உயர்நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு!

அண்மைக் காலத்தில் வேடிக்கையான நாடகம் ஒன்று நம் நாட்டில் அரங்கேறி நடந்துகொண்டுள்ளது.

வெளிநாடுகளின் ஏடுகள் முதல், அரசர் குடும்பங்கள் வரை பலரும் கண்டனம்

திடீரென்று ஆர்.எஸ்.எஸ்., ஹிந்து முன்னணி, பா.ஜ.க. போன்ற அமைப்புகளுக்கு இஸ்லாமியர்களான சிறுபான்மையினர்மீது பரிவும், பாசமும் பொத்துக் கொண்டு, பீறிட்டு அடிப்பதைப் போன்ற நாடகக் காட்சிகள் பழைய கால நாடகங்களில் வரும் திடீர் "டர்னிங் சீன்களைப் போல" நடந்து வருவதன்பற்றிய பின்னணி முக்கிய காரணம் கவனிக்கத்தக்கது.

இங்குள்ள அந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தேவை யின்றி சிறுபான்மைச் சமுதாய மக்களான இஸ்லாமி யர்கள்மீது கரோனா தொற்று நோயை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி டில்லியில் தப்ளிக் அமைப்பி னர் நடத்திய மாநாடு அதன் பிறகு அதில் கலந்து கொண்டோரால் நாடெங்கும் அதிகமாக பரவியது கரோனா என்ற ஒரு பிரச்சாரம், அதன் காரணமாக சில மாநிலங்களில் இஸ்லாமியர்கள்மீது வெறுப்பு நடவடிக்கைகளை ஏவுதல் முதல் வெளிநாடான அய்க்கிய அரபு நாட்டில் பரவிய கரோனாவையும் வைத்து, ஒரு வெறுப்புப் பிரச்சார அலையை உருவாக்கி, சமூக வலை தளங்களில் பரவ விட்ட தற்கு, அந்த நாடுகளின் ஏடுகள் முதல், அரசர் குடும்பங்கள் வரை பலரும் கண்டனம் தெரிவித் தன.

இதனால் இந்தியாவுடன் தாம் கொண் டுள்ள நல்லுறவுக்குக் கேடு ஏற்படக் கூடும் என்பதாக பதிவிட்டதன் விளைவு நமது பிரதமர் மோடி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகம் முதல் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் வரை பலரும் இதனைச் சமாளிக்க விளக்கங்கள் கொடுப்ப தோடு, இஸ்லாமியர் களை வேற்றுமைபடுத்திக் காட்டக் கூடாது என்பது போன்ற ஒரு புதிய நிலைப்பாடு பிரச்சாரத்தில் ஈடுபட்டு, விநோதமான விளைவை உருவாக்கி, வெளி நாட்டிலும், உலகத் திலும் ஏற்பட்ட சரிவைத் தடுத்து நிறுத்த முயல்கின்றனர். (Damage Control Exercise).

### சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

இந்த நிலைப்பாடு இப்படி இருக்கையில், தமிழ் நாட்டில் உள்ள ஹிந்து முன்னணி என்ற அமைப்பினர், தமிழ்நாடு அரசு ஏழை இஸ்லாமி யர்களுக்கு நோன்புக் கஞ்சிக்காக 5,460 டன் பச்சரிசியை வழங்கக்கூடாது என்று அதன் செயலாளர் குற்றாலநாதன் என்பவர் மூலம் பொதுநல வழக்கு ஒன்றை (PIL) உயர்நீதி மன்றத்தில் போட்டுள்ளனர்.

இந்தப்படி ஆண்டுதோறும் அவர்களது விழா விற்கு ஏழை, எளியவர்களுக்கு உதவியாக முதலமைச்ச ராக ஜெயலலிதா அவர்கள் இருந்த காலத்திலே இருந்து சில ஆண்டுகளாகத் தொடர்ந்து இது நடந்து வருகிறது. அப்போதெல்லாம் வாய்மூடி மவுனியாக இருந்தவர்கள் இப்போது இப்படி ஒரு வல்லடி வழக்குப் போடுவது ஏன் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

வெளிநாடுகளில் உள்ளவர்களுக்குத் தெரியும் வகையில், இஸ்லாமிய வெறுப்புக் கூடாது என்று ஒருபுறத்தில் பிரச்சாரம் இன்னொரு களத்தில்



(தமிழ் நாடு) இப்படிப்பட்ட ஒரு வழக்கு என்றால், இது அசல் இரட்டை வேடம் அல்லவா?

இவர்களை இவர்கள் இரட்டை நாக்கு இரட்டைப் போக்குப் பேர்வழிகள் எப்படிப்பட்ட சூழ்ச்சியாளர்கள் என்பதை இந்த வழக்கின்மூலம் உலகம் நன்கு புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பது உறுதி.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் கலாச்சாரம் உள்ள நாட்டில் மதச்சார்பின்மைதான் முக்கியம்!

இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற அமர்வு, ஹிந்து முன்னணி பதிவு செய்யப்பட்ட அமைப்பா? என்று கேட்ட கேள்விக்கு, வாதாடிய வழக்குரைஞர் சரியான பதிலை அளிக்க முடியாத நிலையில், தனி நபர் வழக்காக வாதாடப்பட்டது. இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மதச் சார்பின்மை என்ற அடிப் படைக் கோட்பாட்டிற்கு முரணானது என்று கூறி, வேற்றுமையில் ஒற்றுமை காணும் கலாச்சாரம் உள்ள நாட்டில் மதச்சார்பின்மைதான் முக்கியமானது நாட்டை ஒன்றுபடுத்தும் தத்துவக் கோட்பாடு பாதுகாப்பு என்பதை "பிரபுல்லா கொராடியா க்ஷிவ இந்திய யூனியன்" என்ற உச்சநீதிமன்றத்தின் முந்தைய வழக்கொன்றின் (2011) தீர்ப்பை அடிப் படையாகக் கொண்டு, (அத்தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் ஜஸ்டிஸ் மார்க்கண்டேய கட்ஜூ, ஜஸ்டிஸ் கியான் சுதா மிஸ்ரா ஆகிய இருவர்). சென்னை உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்புக் கூறியுள்ளது.

ஹிந்து முன்னணியினரின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டது!

அத்தீர்ப்பில் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு; அது ஒரு ஹிந்து நாடு அல்லவென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறியதோடு, 1947 நாடு பிரிவினையின்போது அதனால்தான் நம் நாடு பல சோதனைகளையும் கூட நிதானத்துடன் தீர்க்க முடிந்தது என்று குறிப்பிட்டு, இலவசமாக இஸ்லாமியர்களுக்கு நோன்புக் கஞ்சிக்கான அரிசி வழங்கக் கூடாது என்ற ஹிந்து முன்னணியின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று இந்தக் கோரிக்கையைத் தள்ளுபடி செய்துள்ளனர்.

(ஆங்கில 'இந்து' நாளேடு 28.4.2020, பக்கம் 4 இல் வெளியிட்டுள்ள செய்தியைக் காண்க).

இத்தீர்ப்பை வரவேற்றுப் பாராட்டுகிறோம்!

ஹிந்து முன்னணி வகையறாக்களின் இத்தகைய "வித்தைகளைப் புரிந்து" சரியான பார்வையோடு தீர்ப்பளித்துள்ள சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பெருமக்களின் இந்தத் தீர்ப்பு ஒரு கலங்கரை வெளிச்சமே!

இதை வரவேற்றுப் பாராட்டுகிறோம்!

**கி.வீரமணி** தலைவர், திராவிடர் கழகம்

# தேசவிரோதிகள் யார்?

பேங்கில் கடன்பெற்றுக் கொண்டு பணமோசடியில் ஈடுபட்டு , நாட்டைவிட்டேஓடிப்போன 28 பேரில்

SC / ST / OBC / முஸ்லீம்கள் / கிறித்தவர்கள் ஒருவர் கூட இல்லை..

முக்கியமாய் ஒரு தமிழர் கூட இல்லை நேர்மையாக உழைத்து சம்பாதித்து வங்கியில் போட்ட இந்தியர்களின் பணத்தை ஆட்டைய போட்ட 28 தொழிலதிபர்கள்.?

1) விஜய்மல்லையா
2) மெஹுல்சோக்ஷி
3) நீரவ்மோடி
4) நிஷான்மோடி
5) புபேஷ்பெய்டியா
6) ஆஷிஷ்
7) சன்னிகல்லாரா
8) ஆர்த்திகல்லாரா
9) சஞ்ஜய்கல்லாரா
10) வர்ஷாகல்லாரா
11) சுதீர்கல்லாரா
12) ஜித்தின்மேத்தா
13) உமேஷ்பாரீக்
14) கமலேஷ்பாரீக்
15) நிலேஷ்பாரீக்
16) வினய்மிட்டல்
17) ஏகலைவாகர்ஹ
18) சேட்டன்ஜெயந்திலால்
19) நிதின்ஜெயந்திலால்
20) தீப்திபென்சேட்டன்
21) சாவியாசேய்ட்
22) ராஜீவ்கோயல்
23) அல்காகோயல்
24) லலித்மோடி
25) ரித்தீஷ்ஜெயின்
26) ஹித்தேஷ்நாஹேந்தபாய்படேல்
27) மயூரிபென்படேல்
28) ஆஷிஷ்சுரேஷ்பாய்

இவர்கள் வங்கியில் கடன் வாங்கி ஆட்டையப் போட்டது ரொம்ப அதிகமில்லை, வெறும் பத்து லட்சம் கோடி மட்டும் தான்.. இவர்கள் எல்லாம் உயர்ந்த சாதிக் காரர்கள்?

தேசவிரோதிகள்யார்? இந்திய பொருளாதார வீழ்ச்சிக்கு யார் பொறுப்பேற்பது?.

# அகரம் அறக்கட்டளைக்கு சொத்தை தானம் கொடுத்தவர்! உடுப்பி கோபாலகிருஷ்ணன்



## நீதிபதி சந்துரு முகநூலில் பதிவு



அவர் ஒரு பாட்டு கற்று தரும் ஆசிரியர்.தீவிர கடவுள் நம்பிக்கையுள்ளவர்! மிகவும் கஷ்ட ஜீவன முள்ள குடும்பத்திலிருந்து பிழைப்புக்காக சென்னைக்கு குடியேறினார்.

தனது உழைப்பில் கிடைத்தபணத்தில் செங்கை மாவட்டத்தில் தனது சேமிப்பு பணத்தில் சகாய விலையில் (4) நான்கு கிரவுண்ட் வீட்டுமனை நிலத்தை 80களில் வாங்கி வைத்திருந்தார். அதன் இன்றைய சந்தை மதிப்பு ரூபாய் (?)பத்து லட்சம் 10,00,000/ தனது வயதான காலத்தில் தனது மகளுடன் வசிக்க பெங்களூருக்கு குடிபெயர்ந்தார்.

அவர் எனது நெடுநாளைய நண்பர். என்மீது பேரன்பும், மரியாதையையும் வைத்திருப்பவர். ஒருநாள் அவர் என்னிடம் கேட்டார்.

"எனக்கு வயதாகிவிட்டது. எனவே இறுதி காலத்தைப் பார்த்துக்கொள்ள போதுமான சேமிப்பு வைத்திருக்கிறேன். என்னுடைய செங்கை மாவட்டத் திலுள்ள காலிமனையை ஏதேனும் தர்ம காரியத்திற்கு கொடுக்க நினைக்கிறேன். ஆனால் நிச்சயமாக கோவில் (அ) சமயம் சார்ந்த பணிக்கல்ல! ஏழை மக்களின் கல்விக்கு செலவிட நினைக்கிறேன்.!

உங்களது அனுபவத்தில் அப்படி கல்விப்பணி மிகுந்த அமைப்பின் பெயரைக் கூறினால் அவர்களுக்கு தான மாக கொடுத்துவிடுவேன்.எனது மனைவிக்கும் முழு சம்மதமே என்று கூறி அவர்களையும் என்னிடம் பேச வைத்தார்.

நான் உடனே "அகரம் அறக்கட்டளை "பற்றி கூறினேன். உடனே கோபாலகிருஷ்ணன் சம்மதித்தார்.

தானப்பத்திரம் தயாரானது. நான் முதல் சாட்சி கையெழுத்திட்டேன்.

கொரானா காலத்திலேயே 13/03/2020 பத்திரம் பதிவிடப்பட்டது.

உடல்நிலை குன்றியிருந்தபோதும் பெங்களூரிலிருந்து ரயிலில் வந்து கையெழுத்திட்டார்.மூல பத்திரங்களை அகரம் அறக்கட்டளை நிர்வாகிகளிடம் ஒப்படைத்தார்.

**படப்பிடிப்பிலிருந்த தம்பி**

சூர்யா அலைபேசியில் அழைத்து நன்றி தெரிவித்தார். அதில் விந்தையென்னவென்றால் இதுவரை உடுப்பி கோபாலகிருஷ்ணன்

சூர்யாவை படத்தில் கூட பார்த்ததில்லை.அவர் கன்னடக்காரர் வசதி அதிகமில்லை சென்றாலும் பத்துலட்ச ரூபாய மதிப்புள்ள மனையை கல்விப் பணிக்காக அளித்த கோபாலகிருஷ்ணன் போன்றவர்கள் நம்முடன் இருக்கிறார்கள் என்பதில் நம்க்கு எவ்வளவு பெருமை.

நான் ஏன் இந்த நிகழ்வை இங்கு விரிவாகப் பதிகிறேன் என்றால் இன்று சில சக்திகள் ஜோதிகாவிற்கெதிராக முகநூலில் கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். மிரட்டவும் செய்கிறார்கள்.

அவர் என்ன அப்படி தப்பான கருத்தைக் கூறி விட்டார்கள்.கோயில் உண்டியலில் தானம் செய்வது போல் கல்விக்கும் தானமளிப்பீர் என்று தானே?

உடுப்பி கோபாலகிருஷ்ணன் இறைபற்றாளர். அவர் ஜோதிகா சொன்னதை கேட்டவரில்லை.

தானே முன் வந்து சமய காரியங்களுக்கு வேண்டாம்! ஏழைகளின் கல்விக்கு கொடுங்கள் என்று கூறியதோடுஅவர் சக்திக்கும் அப்பாற்பட்டு பத்து லட்சம் ரூபாய்க்கு தான் பத்திரம் எழுதி கொடுத்து விட்டு இரண்டாம் வகுப்பில் பெங்களூருக்கு இரவு ரயில் ஏறினாரே!

சங்கிகளே இந்தியாவில் இது போன்ற கோபாலகிருஷ்ணர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றனர்.இறை பக்திமட்டுமல்ல!அவனது தரித்திர நாராயணர்களுக்கான

கல்விதான் உண்மையான இறைபணி என்று அவர்களுக்குத் தெரியும்!

ஜோதிகாவை நீங்கள் மிரட்டலாம்!

ஆனால் உடுப்பி கோபாலகிருஷ்ணர்கள் உருவாகிக் கொண்டேயிருப்பார்கள்.

இது நிச்சயம்!!இது சத்தியம்!!!*

●

## தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள்.!

01. மறைமலை அடிகளார் (1921)
02. 500 தமிழறிஞர்கள் (1921)
03. தேவநேயப் பாவாணர்
04. பெருஞ்சித்திரனார்
05. இ.மு. சுப்பிரமணியனார்
06. மு.வரதராசனார்
07. இறைக்குருவனார்
08. வ. வேம்பையனார்
09. பேராசிரியர் தமிழண்ணல்
10. வெங்காலூர் குணா
11. கதிர். தமிழ்வாணனார்
12. சின்னப்பத்தமிழர்
13. கி.ஆ.பெ. விசுவநாதர்
14. திரு.வி.க
15. பாரதிதாசனார்
16. கா.சுப்பிரமணியனார்
17. ந.மு.வேங்கடசாமியார்
18. சோமசுந்தர் பாரதியார்
19. புலவர் குழுவினர் (1971)
20.பேராசிரியர் கா.நமசிவாயர்
21. பெரியார்
22. தமிழக அரசாணை (1971,2008)

மலையகத்தில்

01. கோ.சாரங்கபாணியார்
02. சா.சி. குறிஞ்சிக்குமரனார்
03. அ.பு.திருமாலனார்
04. பேராசிரியர் இர.ந. வீரப்பனார்
05. கம்பார் கனிமொழி குப்புசாமி
06. மணி. வெள்ளையனார்
07. திருமாறன்
08. இரெ.சு.முத்தையா
09. இரா. திருமாவளவனார்
10. இர. திருச்செல்வனார்

தமிழர்கள் காலத்தை வகுத்த விதம் பிரம்மிப் பானது.! தமிழர்கள் இயற்கையை ஆதாரமாகக் கொண்டு காலத்தைப் பிரித்தார்கள்.

ஒரு நாளைக்கூட ஆறு சிறு பொழுதுகளாக பிரித்து வைத்திருந்தார்கள். வைகறை காலை நண்பகல் எற்பாடு மாலை யாமம் என்று அவற்றை அழைத்தார்கள்.

அது மட்டுமல்ல, அந்த ஆறு சிறு பொழுதுகளின் தொகுப்பையும் அறுபது நாழிகைகளாகப் பகுத்துக் கணக்கிட்டார்கள். அதாவது ஒரு நாளில் ஆறு சிறுபொழுதுகள் உள்ளன. அந்த ஆறு சிறு பொழுதுகள் கழிவதற்கு அறுபது நாழிகைகள் எடுக்கின்றன என்று தமிழர்கள் பண்டைக் காலத்தில் கணக்கிட்டார்கள். ஒரு நாழிகை என்பது தற்போதைய 24 நிமிடங்களைக் கொண்டதாகும்.

அதாவது பண்டைக் காலத் தமிழர்களது ஒரு நாட் பொழுதின் அறுபது நாழிகைகள் என்பன தற்போதைய கணக்கீடான 1440

நிமிடங்களோடு, அதாவது 24 மணிநேரத்தோடு அச்சாகப் பொருந்துகின்றன. தமிழர்கள் ஒரு நாள் பொழுதை, தற்போதைய நவீன காலத்தையும் விட, அன்றே மிக நுட்பமாகக் கணித்து வைத்திருந்தார்கள் என்பதே உண்மையுமாகும்.!

(1 நாழிகை 24 நிமிடங்கள் 60 நாழிகை 1440 நிமிடங்கள் இதனை இன்றைய கிருத்தவ கணக்கீட்டின் படி பார்த்தால் 1440 நிமிடங்கள் 24 மணித்தியாலங்கள் 24 மணித்தியாலங்கள் 1 நாள்)

பின்னாளில் வந்த ஆரியர்கள் ஓர் ஆண்டை நான்கு பருவங்களாக மட்டும்தான் வகுத்தார்கள். ஆனால், பண்டைக்காலத் தமிழர்களோ,

தமக்குரிய ஆண்டை, அந்த ஆண்டுக்குரிய தமது வாழ்வை, ஆறு பருவங்களாக வகுத்திருந்தார்கள்.

1. இளவேனில் (தைமாசி)
2. முதுவேனில் (பங்குனி சித்திரை)
3. கார் (வைகாசி ஆனி)
4. கூதிர் (ஆடி ஆவணி)
5. முன்பனி (புரட்டாசி ஐப்பசி)
6. பின்பனி (கார்த்திகை மார்கழி)

மேற்கண்ட மாதக்கணக்கில் இளவேனில் என்பது சித்திரை வைகாசி மாதங்களுக்கு உரிய காலம் என சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் அது முற்றிலும் தவறானது உணரவும்.

சித்திரை மாதத்தில் (வேனில்) வெயில் தன் அதிக பட்ச உக்கிரத்தை அடைவதால் அதை முதுவேனில் என்றும் தைமாதத்தில் தொடங்கும் வெயிலை 'இளவேனில்' எனவும் பண்டைத் தமிழர்கள் அழகாகப் பகுத்திருந்தார்கள்.

காலத்தை, அறுபது நாழிகைகளாகவும், ஆறு சிறு பொழுதுகளாகவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழன் தன்னுடைய புத்தாண்டுவாழ்வை இளவேனிற் காலத்தில்தான் (தை) தொடங்குகின்றான்.!

இங்கே ஒரு மிக முக்கியமான செய்தியை நாம் அனைவருமே கருத்தில் கொள்ள வேண்டும்!

பண்பாட்டுப் பெருமைகொண்டமற்றைய பல இனத்தவர்களும்,தங்களுடைய புத்தாண்டு வாழ்வை, தங்களுடைய இளவேனிற் காலங்களில்தான் ஆரம்பிக்கின்றார்கள்.

தமிழர்கள் மட்டுமல்ல, சீனர்களும், ஜப்பானியர் களும், கொரியர்களும், மஞ்சூரியர்களும் என, பல கோடி இன மக்கள் தொன்மையான பண்பாட்டு வாழ்வினைக் கொண்ட பெருமை வாய்ந்த மக்கள் தங்களுடைய இளவேனிற் காலத்தையே தமது புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

தமிழர்கள் நாம் மட்டும் ஆரியப் பழக்கத்துக்கு மாறிவிட்டோம்! இடையில் வந்த இடைச்செருகலால் வந்த வினை இது. நம் இளவேனில் காலம் தை மாதம் தான். அதனால்தான் தைமுதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு என்கிறோம்.

தமிழர்க்கு எதிரான சக்திகளின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல், தமிழின், தமிழரின் பெருமையைப் பாதுகாக்கும் பொருட்டுத் தமிழர் யாவரும் தை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி மகிழ்வோம். இதுகுறித்துப் பாவேந்தர் பாரதிதாசன் நமக்குத் தரும் அறிவுரையைக் கேளுங்கள்.

நித்திரையில் இருக்கும் தமிழா!

சித்திரை இல்லை உனக்குப் புத்தாண்டு

அண்டிப்பிழைக்க வந்த ஆரியக்கூட்டம் கற்பித்ததே அறிவுக்கொவ்வா அறுபது

ஆண்டுகள் தரணி ஆண்ட தமிழனுக்கு

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!

இங்கு எப்படி விபரமாக பதிவிட்டாலும் ஏற்பவர்கள் தமிழர்கள். ஏற்காதவரும் தமிழர்களே என்று சொல்லிடுவோம்.!

தங்கட்டும் தங்கட்டும்,

தங்கத்தமிழ் மண்தனில்

தமிழ் புத்தாண்டு தை முதல் நாளில்.! ●



# அரபு நாட்டில் மன்னிப்புக் கேட்ட பாஜக

உலகில் பாகிஸ்தானைத் தவிரவேறு எந்த நாடுகளும் இந்தியாவில் நடக்கும் எந்த ஒரு நிகழ்வையும் கவனிப்பதில்லை; தலையிடுவதும் இல்லை.

அதிலும் குறிப்பாக அரபு நாடுகளைப் பொறுத்த வரை இந்தியா என்பது பெட்ரோலிய பொருட்களுக் கான பெரியசந்தை மற்றும் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்குக் கிடைக்கும்மனிதவளம்கொண்டநாடு.

இதைத் தவிர்த்துவேறு எந்தக் கண்ணோட்டமும் அவர்களுக்கு இல்லை. இந்தியாவின் பன்முகத்தன்மை, அதற்குள் இருக்கும் ஜாதி, மத, இனப் பாகுபாடுகள் குறித்த புரிதலும் அவர்களிடம் இருப்பதில்லை. தானுண்டு, தேசம் உண்டு என்பதே அவர்களின் வாழ்க்கை, அரசியல்!

ஆனால் இதைச் சற்றுமாற்றி இருக்கிறது அரபுநாட்டின் கொரோனா ஊரடங்கு.

அரபுநாடுகளில் வாழ்ந்து கொண்டே மதவெறிப் பதிவுகளைப் பாஜக தொண்டர்கள் தொடர்ந்து பதிவு செய்துவந்தனர். இதில் சிலரின் சேட்டைகள் உச்சத்தில் போயின. அரபு நாடுகளில் வாழும் இந்தியர்களில் 1% கூட இவர்கள் இருப்பதில்லை.

எனினும் இவர்களின் பதிவுகள் அரேபியர்கள் கவனத்திற்கு இதுவரை சென்ற தில்லை. இப்போது ஊரடங்கில்முடங்கி இருக்கும் அரபு மக்களுக்கு, குறிப்பாக அரச குடும்பங்களின் பார்வைக்கு இது வந்திருக்கிறது. இதன் பிறகுதான் சில நடவடிக்கைகள் தொடங்கி இருக்கின்றன.

அரபு நாடுகளில் கடந்த 15 நாட்களில் 10 க்கும் மேற்பட்ட பாஜக, ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் மத ரீதியானதாக்குதலைத் தொடுத்ததாகக் காவல்துறை யிடம் சிக்கி இருக்கிறார்கள்.

மாட்டிக்கொண்ட அனைவருமே தங்கள் தலைவர் வீரசாவர்கர் போல மன்னிப்புக் கடிதங்களை எழுதிக்கு விக்கிறார்களாம். இதில் உச்சக்கட்டமாக 'ஒருஆர். எஸ்.எஸ்' நண்பர் தற்கொலை மிரட்டல் வரை போயிருக் கிறார்.

அரபு நாடுகளில் வாழும் இவர்களால், ஒட்டு மொத்த இந்தியர்களின் மீதான பார்வையும் மாறி இருக்கிறது. இது எதிர்காலத்தில் இந்தியர்களின் வேலை வாய்ப்பில் சிக்கலை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு.

இதோடு இல்லாமல் இந்தப் பிரச்சினை இந்தியாவின் வெளியுறவு கொள்கையிலும் எதிரொலிக்கும் அளவு வந்திருக்கிறது. பாஜக தலைவர்கள் இதுவரைப்பேசிய பழைய பேச்சுகள் தூசிதட்டி எடுக்கப்படுகின்றன. அரபு பெண்களைப் பற்றிபேசிய 'தேஜஸ்விசூர்யா' என்பவர் அரபுநாடுகள் வழியாக இனிவிமானத்தில் கூடசெல்லக் கூடாது எனதுபாய் அரச குடும்பம் எச்சரித்துள்ளது.

இஸ்லாமியர்களின் மெக்காகுறித்து சுப்பிரமணிய சுவாமி பேசிய பேச்சுக் குறித்து, பிரதமர்மோடியை நோக்கி நேரடியாகவே அரபுநாடுகள் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாகத் துபாய், ஷார்ஜா, குவைத், பஹ்ரைன் உள்ளிட்ட அரச குடும்பத்தினர்கள் கடும் கோபத்தில் இந்தக்கேள்விகளை முன் வைக்கின்றனர்.

இது இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த பிரதமர் மோடி திடீரென தன் டுவிட்டரில், "கொரோனாவிற்கு மதம், இனம், மொழி, நிறம் இல்லை எனப் பதிவிட்டார்.

இதுமோடிக்கான நெருக்கடி என்பதைவிட இந்தியாவிற்கான நெருக்கடி என்றே கொள்ளலாம். இதற்குக் காரணமாக அமைந்தது இந்தியாவிற்கு உள்ளும், வெளியிலும் இருக்கும் பாஜக, ஆர்.எஸ்எஸ் உறுப்பினர்கள் மட்டுமே.

**வி.சி.வில்வம்**

(எனது நடையில் மாற்ற எழுதப்பட்ட பகிர்வு செய்தி)

# கண்களின் மூலம் கரோனா பரவுமா?



கரோனா இன்று உலகமெங்கும் அனைவரையும் ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. எந்நேரமும் கரோனா குறித்த செய்திகள்தாம். 'கரோனா' வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் கண்களைப் பாதுகாப்பாக வைப்பது குறித்த தகவல்களை உலகெங்கும் உள்ள கண் மருத்துவச் சங்கங்கள் வெளியிட்டு வருகின்றன.

**கண்ணில் சிவப்பு ஏற்பட்டால் பயப்பட வேண்டுமா ?**

'மெட்ராஸ் ஐ' என்று சொல்லப்படும் கண்வலி 'அடினோ' வைரஸால் ஏற்படக்கூடியது. இதுபோன்ற கண்சிவப்பு 'கரோனா' வைரஸ் தொற்றின் அறிகுறியாக இருக்குமா என்பது சிலரது சந்தேகம். ஒரு வேளை சிவப்பு ஏற்பட்டால் பயப்பட வேண்டுமா என்றும் கேட்கிறார்கள்.

இதுவரையிலும் 'கரோனா' வைரஸ் தொற்றின் அறிகுறியாகக் கண் சிவப்பு வரையறை செய்யப்படவில்லை. பொதுவாகக் கண்ணில் சிவப்பு, கண் இமை வீக்கம், கண்ணில் பீளை தள்ளுதல், கண் இமை ஒட்டிக்கொள்ளுதல், நீர் வடிதல் போன்ற பிரச்சினை ஏற்பட்டால் கண் மருத்துவரின் அறிவுரையைப் பெறுவது நல்லது.

அதே நேரத்தில் கரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான ஒருவர் தும்மும்போதோ இருமும்போதோ வெளிப்படும் நீர்த்திவலைகள் எதிரில் இருப்பவர்களின் கண்ணில் விழும்போது அவர்களுக்குக் கண்வலியுடன் கரோனா தொற்று ஏற்படும் ஆபத்தும் மிக அதிகமாக இருக்கிறது. எனவேதான் அரசு அனைவரையும் முகக்கவசம் அணியும்படி அறிவுறுத்துகிறது. இதன் மூலம் நோய்த் தொற்று பரவுவது தடுக்கப்படுகிறது.

ஒருவருக்குக் கண்சிவப்புடன் காய்ச்சலோ, சளி, இருமல், மூச்சுத்திணறல் போன்ற பிரச்சினைகளோ இருந்தால் கூடுதல் கவனம் எடுத்துக்கொண்டு உடனே மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம்.

மேலும், வீட்டில் உள்ள மேல்நிலை நீர்த் தொட்டி நீண்ட நாட்களாகச் சுத்தம் செய்யாமல் இருக்கும்போது

நீர் அசுத்தமாகி அதில் தொற்று ஏற்படலாம். வீட்டில் உள்ளவர்கள் இந்த அசுத்த நீரால் கண்களைக் கழுவும்போது கண்ணில் தொற்று ஏற்பட்டு கண்ணில் சிவப்பு உருவாகும் ஆபத்து இருக்கிறது. எனவே, நீர்த்தொட்டிகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் சுத்தம் செய்வது நல்லது. வீட்டில் இருக்கும் இந்தக் காலத்தில் அதைச் செய்யலாம்.

**அமெரிக்கக் கண்மருத்துவ அகாடமி சொல்லும் அறிவுரை**

பலருக்கு அடிக்கடி கண்களைத் தேய்க்கும் பழக்கம் இருக்கும், சிலர் கண்களைத் தேய்த்துக் கண்ணின் ஓரத்தில் இருக்கும் அழுக்கு, பீளையினை எடுத்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை நன்றாகக் கழுவாமல் முகத்தைத் தொடக் கூடாது.

கண்ணாடி அணிந்திருப்பவர்கள் கண்ணாடியையும் அடிக்கடி வெறும் கையால் தொடக்கூடாது. கண்ணாடியை சோப்பால் கழுவிவிட்டு உலர வைத்து பின்னர் போட்டுக் கொள்ளலாம்.

கான்டாக்ட் லென்ஸ் அணிந்திருப்பவர்கள், கரோனா தொற்று ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் லென்ஸை எடுத்துவிட்டுப் பதிலாகக் கண்ணாடியைப் போட்டுக் கொள்வது நல்லது.

**கண்ணுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுப்பது எப்படி?**

அரசின் அறிவுரைப்படி நோய்த்தொற்றுப் பரவலைத் தடுக்க வேண்டி ஊரடங்கு காலத்தில் வீட்டிலேயே அனைவரும் முடங்கிக் கிடக்கிறோம். பொழுதைக் கழிக்க அலைபேசியை அடிக்கடி பார்க்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு கண்ணுக்கு அருகிலேயே மிகச் சிறிய திரை கொண்ட அலைபேசியைத் தொடர்ந்து பல மணிநேரம் பார்ப்பதன் மூலம் கண்கள் விரைவில் களைப்படையலாம். இதனால் பார்வை மங்கல், தலைவலி, கண்ணில் வலி, கண்ணில் எரிச்சல்சிவப்பு, போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். இதுபோன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபட முடிந்தவரை அலைபேசிக்குப் பதிலாக மேஜைக் கணினி, மடிக்கணினி அல்லது 'ஐ' பாடைப் பயன்படுத்தலாம்.

மேலும், இவ்வாறு பார்க்கும்போது 20:20 என்ற பார்முலாவை நினைவில் கொள்வது நல்லது. அதாவது ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும் கண்களைக் கணினி/அலைபேசியிலிருந்து விலக்கி 20 அடி தொலைவில் உள்ள பொருளைப் பார்த்துவிட்டுக் கண்களை நான்கைந்து முறை சிமிட்டிவிட்டு மீண்டும் பார்க்கலாம். இதன் மூலம் கண்ணுக்கு ஏற்படும் அனைத்து அசௌகரியங்களையும் தவிர்க்கலாம்.

**பலருக்கு அடிக்கடி கண்களைத் தேய்க்கும் பழக்கம் இருக்கும், சிலர் கண்களைத் தேய்த்துக் கண்ணின் ஓரத்தில் இருக்கும் அழுக்கு, பீளையினை எடுத்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை நன்றாகக் கழுவாமல் முகத்தைத் தொடக் கூடாது.**

**குழந்தைகளுக்குச் சிறப்புக் கவனம் தேவையா?**

ஆமாம், கண்டிப்பாகத் தேவை. குழந்தைகளுக்கு அண்மைக்காலமாகக் கிட்டப்பார்வைக் குறைபாடு கணிசமான அளவில் விரைவாக அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இது உலகளாவிய பிரச்சினை. குழந்தைகள் செல்போன், கணினி போன்ற மின்னணு சாதனங்களை அதிக நேரம் தொடர்ந்து பயன்படுத்துவதுதான் இதற்குக் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். விழிக்கோளத்தின் இயல்பான வளர்ச்சிக்கும் வடிவத்துக்கும் சூரிய ஒளி அவசியம். ஆனால், பிள்ளைகள் வீட்டுக்கு வெளியில் சென்று விளையாடாததால் (Myopia ) கிட்டப்பார்வைக் குறைபாடு ஏற்படுவது அதிகரித்து வருகிறது.

ஏற்கெனவே இந்தப் பிரச்சினை இப்படி இருக்கையில் தற்போதைய ஊரடங்கு காலத்தில் இந்த மின்னணு சாதனங்களின் பயன்பாடு மேலும் அதிகரித்து வருவது கண்கூடு. பிறகு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு? இருக்கிறது. 5 வயது முதல் 15 வயதுள்ள பிள்ளைகளைத் தினமும் காலையில் சூரிய ஒளியில் நிற்கச் சொல்லலாம். மொட்டை மாடியிலோ பால்கனியிலோ அல்லது வீட்டுக்கு வெளியிலோ அரை மணிநேரம் உடலில் சூரிய ஒளி படும்படி நிற்கச் செய்யலாம். இதன் மூலம் கிட்டப்பார்வை ஏற்படுவதை ஓரளவு தடுக்க முடியும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அப்படி நிற்கும்போது கண்ணில் சூரிய ஒளி நேரடியாகப் படாதவாறு நிற்க வேண்டும்.

யாரும் எதிர்பாராமல் விரும்பத்தகாத விருந்தாளியாக கரோனா வந்துவிட்டது. இந்த ஊரடங்கு காலத்தில் சமூக விலகலை முறையாகக் கடைப்பிடித்து கரோனா வைரஸ் நோயை விரட்டி அடிப்போம்.

நன்றி : **தமிழ் இந்து**

மு. வீராசாமி கட்டுரையாளர், மதுரை அரசு கண் மருத்துவ உதவியாளர்

●



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



தமிழ்நாடு அரசு
திருமழிசை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்
கொரோனா வைரஸ் காய்ச்சல் (nCovid-2019)
உங்கள் கைகளை அடிக்கடி சோப்பு பயன்படுத்தி கழுவவும்
இருமல் (அ) சளி இருந்தால் முககவசம் அணிந்து செல்லவும்
இரும்பும்போது (அ) தும்பும்போது துணியால் வாயை மூடிக்கொள்ளவும்.
பதப்படுத்தாத (அ) நன்கு சமைக்கப்படாத இறைச்சிகளை உண்ண வேண்டாம்
கூட்ட நெரிசலை தவிர்த்திடுங்கள்
நன்றாக கை கழுவ குறைந்தது 20 வினாடிகள் தேவைப்படும்.
தினமும் 10 முதல் 15 முறை கைகளை சோப்பு போட்டு தேய்த்து கழுவ வேண்டும்.
இரும்பும்போதும், தும்பும்போதும் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை கொண்டு மூடிக்கொள்ள வேண்டும்.
சிகிச்சை தரும் அனைத்து மருத்துவமனைகளிலும், கிருமிநாசினி கொண்டு சுத்தமாக துடைத்து பராமரித்தல் வேண்டும்.
கூட்ட நெரிசலை தவிர்த்து, தேவையற்ற பயணங்களை தவிர்ப்போம்.
கைகூப்புவோம்.. கொரோனாவை தவிர்ப்போம்!
அச்சப்படத் தேவையில்லை... விழிப்புடன் இருப்போம்!
திருமதி. மகேஸ்வரி ரவிகுமார்
மாவட்ட ஆட்சியர்
திருவள்ளூர் மாவட்டம்
நோய் பரவும் விதம்
நோய் அறிகுறிகள் கண்ட நபர் இரும்பும் போதும், தும்மும் போதும் வெளிப்படும் நீர்த் திவலைகள் மூலம் நேரடியாக பரவுகிறது.
மேலும் இருமல் மற்றும் தும்மல் மூலம் வெளிப்படும் கிருமிகளை உடைய நீர்த் திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும்போது கைகள் மூலமாகவும் பரவுகிறது.
நோயின் அறிகுறிகள்
காய்ச்சல்
தலைவலி
தும்மல்
தொண்டைவலி
இருமல் மற்றும் சளி
உடல் சோர்வு
மூச்சுத் திணறல்
நிமோனியா
திரு. ம. சங்கர்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ)
திருவள்ளூர் மண்டலம்
திருமதி. வ. பிரேமா
செயல் அலுவலர்
திருமழிசை பேரூராட்சி

MUTRAM - Tamil & English Monthly  RNI No. TNBIL/2010/36924.



அறநெறிமக்கள்கட்சியின்
தென்மண்டலச் செயலாளர்
திரு. ஜோஸ்வா தமிழரசு அவர்கள்
குறவர்இனமக்களுக்கு உணவு
வழங்கினார்.



அறநெறி மக்கள் கட்சியின்
வடசென்னை மாவட்டத் தலைவர்
திரு. சைமன்பால் அவர்கள்
அரிசி காய்கறி உள்ளிட்டவைகளை
ஏழை மக்களுக்கு வழங்கினார்.



திரு.தங்கப்பாண்டியன் அவர்கள்
ஏழை எளிய மக்களுக்கு அரிசி,
மளிகைப்பொருட்களை வழங்கினார்.